திருத்தொண்டர் கீதம்

தருமபுர ஆதீனம்.

T10860
R003H04

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம்

இருபத்து நான்காம் மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நான்காவது ஆண்டு

குருபூஜை விழா அணிமலர்

5—6—1949

வெளியீடு எண் 193.

உ

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் கீதம்

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

வெளியிடப்பெற்றது.

ஆசிரியர் :

திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.

பிரதிகள், 1000.

ஞானசம்பந்தப் பதிப்பகம்
— தருமபுரம் —

உ

குருபாதம்

பொருளடக்கம்

தோற்றுவாய்	...	க
முன்னுரை	...	கரு
அணிந்துரை	...	கசு
மதிப்புரைகள்	....	உக
அதிபத்த நாயனர்	....	53
அப்பாலுமடிச்சார்ந்தார்	....	79
அப்பூதியடிகள் நாயனர்	....	33
அமர்நீதி நாயனர்	....	8
அரிவாட்டாய நாயனர்	....	15
ஆனய நாயனர்	....	16
இசைஞானியார்	....	90
இடங்கழி நாயனர்	....	67
இயற்பகை நாயனர்	....	4
இளையான்குடிமாற நாயனர்	....	5
உருத்திரபசுபதி நாயனர்	....	19
எறிபத்த நாயனர்	....	9
ஏயர்கோன்கலிக்காம நாயனர்	....	38
ஏனதிநாத நாயனர்	....	10
ஐயடிகள்காடவர்கோன் நாயனர்	....	58

கணநாத நாயனார்	....	48
கணம்புல்ல நாயனார்	....	59
கண்ணப்ப நாயனார்	....	11
கலிக்கம்ப நாயனார்	....	54
கலிய நாயனார்	....	56
கழற்சிங்க நாயனார்	....	65
காரி நாயனார்	....	61
காரைக்காலம்மையார்	...	31
குங்குலியக்கலய நாயனார்	....	12
குலச்சிறை நாயனார்	....	28
கூற்றுவ நாயனார்	....	49
கோச்செங்கட்சோழ நாயனார்	....	86
கோட்புலி நாயனார்	....	71
சடைய நாயனார்	....	89
சண்டீச நாயனார்	....	24
சத்தி நாயனார்	....	57
சாக்கிய நாயனார்	....	43
சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார்	....	75
சிறப்புலி நாயனார்	....	44
சிறுத்தொண்ட நாயனார்	....	45
சுந்தரமூர்த்தி நாயனார்	....	92
செருத்துணை நாயனார்	....	68
சேக்கிழார்பெருமான்	....	96
சேரமான்பெருமாள் நாயனார்	....	46

சோமாசிமாற நாயனார்	....	42
தண்டியடிகள் நாயனார்	....	40
திருக்குறிப்புத்தொண்ட நாயனார்	....	22
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்	....	36
திருநாவுக்கரசு நாயனார்	....	26
திருநாளைப்போவார் நாயனார்	....	20
திருநீலகண்ட நாயனார்	....	3
திருநீகண்டயாழ்ப்பாண நாயனார்	....	88
திருநீலநக்க நாயனார்	....	34
திருமூல நாயனார்	....	39
திருவாரூர்ப்பிறந்தார்	....	76
தில்லைவாழுந்தணர்	....	1
நம்பியாண்டார்நம்பி	....	95
நமிநந்தியடிகள் நாயனார்	....	35
நரசிங்கமுனையரைய நாயனார்	....	52
நெடுமாற நாயனார்	....	62
நேச நாயனார்	....	85
பத்தராய்ப்பணிவார்	....	73
பரமனையேபாடுவார்	....	74
புகழ்ச்சோழ நாயனார்	....	51
புகழ்த்துணை நாயனார்	....	69
பூசலார் நாயனார்	....	81
பெருமிழலைக்குறும்ப நாயனார்	....	29
பொய்யடிமையில்லாத புலவர்	....	50

மங்கையர்க்கரசியார்	....	83
மாணிக்கவாசகர்	....	94
மானக்கஞ்சாற நாயனர்	....	13
முப்போதும்திருமேனிதீண்டுவார்	....	77
முருக நாயனர்	....	18
முழுநீறுபூசிய முனிவர்	....	78
முனையடுவார் நாயனர்	....	64
மூர்க்க நாயனர்	....	41
மூர்த்தி நாயனர்	....	17
மெய்ப்பொருள் நாயனர்	....	6
வாயிலார் நாயனர்	....	63
விறன்மிண்ட நாயனர்	....	7

உ

சிவமயம்

தோற்றுவாய்

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து நான்காவதாண்டில் ஓரிரவு, இசைக்கவிபுனையும் இன்ப உணர்ச்சி திடீரென்று என்னுட் பெருக்கெடுத்தது. அப்போது, திருத்தொண்டர்புராணத்தில் ஈடுபட்டுத் திளைத்துவந்த என் உள்ளம் ஒருசில அடியார்களை நினைந்து உருகியது; ஒருசில கீர்த்தனங்கள் உடனே உருவாகின. ஆனால், இறைவன் திருவருள் அவை யிற்றை விரும்பிற்றிலதுபோலும். ஏனெனில் அவை எழுதப்பட்டபின் அவை தீட்டப்பெற்ற தாள்களை எவ்விதமோ யான் இழந்துவிட்டேன்.

கீர்த்தனைகளை இழப்பினும், அடியார்களை இசைமூலம் பிரார்த்தனைசெய்யும் முயற்சியை யான் இழக்கவில்லை. கடந்த ஆண்டில் ஒருநாள் தில்லையம் பதியில் என்நண்பர் திரு. என். தண்டபாணிபிள்ளை அவர்கள் இல்லத்தில் ஸ்ரீமத் மௌனம் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்களின் அருட் கூட்டுறவை யான் அடையும் பேறு பெற்றேன். இவ்வாறு 'அடியார் நடுவுள் இருக்கும் அருளை' யான் பெற்றதும், நம் நடராஜப்பெருமான் ''என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்று'' செய்த கருணைத்திறமேயாயது. ஏனெனில் அதன் மறு நாள், தொண்டர்சீர்பரவும் சேக்கிழார் பெருமான்

தாம் அருள்வலிமைபெற்று ஆக்கியருளிய திருத்தொண்டர் புராணத்தினை எந்த ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றினர்களோ அதேமண்டபத்தில் ஆயிரக்கணக்கான அடியார் கூடிய அவையில் "அடியார் பெருமை" என்னும் பொருள்பற்றியே அடியேன் பேசும் பெரும்பேறுபெற்றேன்.

இவ்வாறு என்னைத் 'தொண்டரொடு கூட்டிய' அண்டர்தம் நாயகன் திருவருள் இத்துடன் நின்றுவிடவில்லை. தருமபுர ஆதீனச் சைவப் பிரசாரக் குழுவில் என்னைச் சேர்த்தது; மறுநாள் திருநாரையூருக்கும் என்னை ஈர்த்தது. அவண் திகழும் பொல்லாப்பிள்ளையாரின் புனித உருவைக்கண்டு என் உள்ளம் பூரித்தேன். பேரின்ப வெள்ளப் பெருக்கில் இடையறாது மூழ்கிக் குடைந்தாடினேன். நம்பியாண்டார் நம்பிகளின் அருள் திருவுருவம் 'சட்டோ நினைக்க என் மனத்தமுதாய்' இன்பம் ஈந்தது. அதற்கு முன்னும், அதன் பின்னும் யான் அன்று அனுபவித்த பேரின்ப சுகத்தை வேறு எந்த விநாயகப்பெருமானின் திருமுன்னரும் அடியேன் நுகர்ந்தறியும் பேறு பெற்றிலேன். அவ்வமயம் என் உள்ளத்தே பேசாக் கிளவியாய்ப் பிரார்த்தனையொன்றுமுகிழ்த்தது. "எல்லாப் பெருமையும் இனிதளிக்கும் எம்பெருமானே! பொல்லாப்பிள்ளையார் என்று உலகம் புகழும் பொற்புடையோய்! நம்பியாண்டார் நம்பியை நானிலம் வியக்க ஆண்டருள் புரிந்த அண்ணலே! அப்பெருந்தகைக்குச் செய்த நின்

திருவருளில் கோடியில் ஒருபங்கையேனும் 'கோடி' என அடியேற்குக் கொடுத்தல் ஆகாதா?'' என்பது தான் அப்பிரார்த்தனை.

இதன்பின் சில மாதங்கள் கழிந்தன. அவ்வமயம், கையாற்றொழுதும் அவர் கழற்சேவடிகள் கழுமத் தழுவிக்கொண்டும் எம் ஐயாற்றரசின் அரும்பெரும் கோயில் அமைந்த நற்றலமாய திருவையாற்றில் அடியேன் வதிந்துவந்தேன். திடீரென ஒருநாள் (19—10—48) சண்டீசப் பெருமான் பேரில் கீர்த்தனையொன்று யான் இயற்றலானேன். அதன்பின் காரைக்கால் அம்மை மீது வேறொரு பாட்டு எழுதப்பட்டது. நான்கு ஆண்டுகட்கு முன் ஒருநாள் தோன்றி உடனே மறைந்த இசைக்கவியுணர்ச்சி மீண்டும் அப்போது மீக்கூறவந்தது. அதன்வேகம் அன்றும் அதன்பின் நான்குநாட்களும் தணியாது நின்றது. எனவே, 1948-வது வருடம் அக்டோபர் மாதம் 19, 22, 25, 26, 27 இவ்வைந்து தினங்களுக்குள் தனியடியார், தொகையடியார் ஆகிய எழுபத்திரண்டு அடியார்கள்பேரிலும் எழுபத்திரண்டு கீர்த்தனைகள் உருப்பெற்றொளிர்ந்தன. சில உரிய நண்பர்களிடம் அவற்றைப் பாடிக்காட்டினேன். அவர்கள்து பாராட்டுதல் எனக்குப் பரிசாய் அமைந்தது. பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் ஓரளவிலாவது 'பொல்லாப் பிள்ளை' யாகிய அடியேற்கும் கிட்டியது போலும்!

தற்போது தருமையாதீனத் தலைவராய் அருட் பீடத்து அமர்ந்துள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருங்கருணைக் கட்டளையின்படி, அடியேனால் மேற்கூறியவாறு இயற்றப்பட்ட 'திருத் தொண்டர்கீதம்' என்னும் இந்நூல், புள்ளிருக்கு வேளூரின் உள்ளிருக்கும் புனிதன் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமியின் திருவடித்தாமரையில் வைத்து எடுக்கப்பட்டு 4—11—48 அன்று மாலை 7-மணிக்கு அடியேனால் சில பல சிவநேயர்கள் அமைந்த சபையின்முன்பு ஒருவாறு பாடிக்காட்டப் பெற்றது. அவ்வருந்தலத்தின் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் அவைத் தலைமைதாங்கி அடியேனுக்கு ஆசிகூறி ஆதரவளித்தார்கள்.

அதன்பின் எனது உரிய நண்பர்கள் சிலரிடம் இந்நூலைப் படித்துக்காட்டிச் சிற்சில இடங்களில் அவசியமான திருத்தங்களையும் செய்து இதைப் பூர்த்திசெய்தேன்.

தொண்டர்சீர்பரவும் தூயநற்பணியில் என் போன்ற ஏழைக்கும் இத்தகையதோர் பங்கு கிடைத்த பெரும்பேற்றை நினைந்து நினைந்து திருவருளை வாழ்த்துகிறேன். இசையிலேயே தொடங்கப் பெற்ற திருத்தொண்டத்தொகை இன்று இசையிலேயே திருத்தொண்டர் கீதமாக முடிகின்றது! இடையில் இயற்றமிழால் தொண்டர்தம் பெருமை ஏனைய சிலரால் பரவப்பட்டுவந்துள்ளது. எனவே, திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்

தாதி, திருத்தொண்டர்புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருத்தொண்டர் திருநாமக்கோவை யாகிய இத்தொடரின் இறுதியாகத் திருத்தொண் டர் கீதமும் அமைந்துள்ளது. இவற்றுள் திருத் தொண்டத்தொகையும் திருத்தொண்டர் திருவந் தாதியும் பெரியபுராணத்தைப்போன்ற பிரதானம் உடைமையின் இந்நூலில், ஒவ்வொருகீர்த்தனையின் தொடக்கத்திலும் அந்த அந்த அடியாரைப்பற்றிச் சுந்தரமூர்த்திகள் பாடியுள்ள அடிகளையும், நம்பி யாண்டார் நம்பிகள் பாடியுள்ள பாடல் அல்லது பாடல்களையும் முறையே அமைத்துள்ளேன். இம் முறை வாசகர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்று நம்புகிறேன். கீர்த்தனைகள் எல்லாம் சேக் கிழார் பெருமானின் பெரியபுரர்ணத்தில் கூறப் பட்டுள்ள அடியார் சரிதங்களின் சாரமாகவே இயன்றவரை யமைக்கப்பட்டுள்ளன. ஒரு நான்கு அடியார்களுக்கே ஒவ்வொரு கீர்த்தனையிலும் இரண்டு சரணங்கள் அமைந்துள்ளன. ஏனைய எல்லாக் கீர்த்தனைகளும் முறையே ஒவ்வொரு சரணத்தையே உடையன. இம்முறை சங்கீத வித்துவான்களுக்குச் சந்தோஷத்தையும் சௌகரி யத்தையும் அளிக்கும் என்பது உறுதி.

தனியடியார், தொகையடியார், சுந்தரர், ஆக எழுபத்திரண்டு அடியார்கள்தாம் பெரியபுராணத் துட் பாடப்படுபவர்கள். ஆனால் இவ்வெழுபத்தி ரண்டு அடியார்களைமட்டும், ஒவ்வொரு கீர்த்தனை யாற் பாடியதோடு யான் அமயவில்லை. தொல்லை

யிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி ஒல்லைவந்தென்னை யாட்கொண்டு திருநெறிசேர்த்த திருவாதவூரடிகளை யும், ஒருமுறைமறைந்து ஓதுதற்குதவாது போன திருமுறைகள்தம்மைத் திருவருள்துணையுடன் நமக்குத்தருமறையோராகிய நம்பியாண்டார் நம்பியை யும், உலகம் உய்ய நாம் உய்ய, அலகில்கோடி உயிர் உய்ய, நிலவிச் சைவம் தானுய்ய நிறைந்த தமிழால் திருத்தொண்டர் நீடும் பெருமைதனை யுரைத்த சிறந்த தெய்வக்கவிப் பெருமான் சேக்கிழாராம் நம் பாக்கியத்தையும் பாடப்பெறாத தொண்டர்நூல், உலகால் நாடப்பெறாத நூலாமன்றோ? ஆகலின், இம்முப்பெரும் தவத்தோர்க்கும் முறையே ஒப்ப ஒவ்வொரு கீர்த்தனை இயற்றியுள்ளேன். ஆக, இதில் அடங்கியுள்ள கீர்த்தனைகள் எழுபத்தைந்து.

அநபாயன் காலத்திலே பாமர மக்களிடைச் சைவ வுணர்ச்சி குறைந்திருந்ததின் காரணமே அவர்களது உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சிப் பெருக்கை உண்டாக்கக்கூடிய சிவனடியார்களின் சீரிய கதைகளும் சரித்திரங்களும் இல்லாமைதான் என்பதை நாம் இப்போது அறிகிறோம். அந்தப் பெரும் குறையை நீக்கியருளிய பெருமை வாக்கினிற் சிறந்த சேக்கிழார் பெருமானுக்கே உரிய தாகும். தற்காலத்திலும் ஏறக்குறைய அதே பழைய நிலை இருந்து வருகின்றது என்னலாம். எனவே, இப்போதும் சைவத்துக்குப் புத்துயிர் அளித்துப் புனிதமாக்க அதே சேக்கிழாரின் பெரிய புராணத்தைத்தான் நாமும் ஆயுதமாகக்

கையாளவேண்டும். ஓரளவிற்கு இன்று பெரிய புராணம் இறைவனல் ஆணையிடப்பட்டதும் தனது இயல்பானதும் ஆகிய அருந்தொண்டினைச் செய்து கொண்டுதான் வருகிறது. அந் நூலை ஒரு சிறு சாரார் முழுமனதுடன் எதிர்க்க முற்பட்டதும் எம் சிவபெருமான் நம்மை ஆட்கொள்ளக் கையாளும் அரிய முறைகளுள் ஒன்று என்று யான் கருது கிறேன். அதன்பயனய் இன்று சைவர்கள் அந் நூலை அதிகமாக விரும்பிக்கற்று வேட்கையுடன் பிரசாரம் செய்துவரத் தலைப்பட்டுள்ளனர். இந்த உயரிய புத்துணர்ச்சிப் பெருக்கு விரிந்து, பரந்து, ஆருக, வெள்ளமாக ஓடி நம் தமிழ் நாட்டைச் செழிப்பித்து உய்விக்க வேண்டுமெனின் அதற்கு இசை இன்றியமையாததொரு இனிய, எளிய கருவியாகும். இதற்குமுன் பெரிய புராணக்கீர்த் தனை என்ற நூலொன்று ஒரு பெரியாரால் ஆக்கப் பட்டுள்ளது என்று அறிகின்றேன். அதுவும் இந்நூலும் சங்கீத வித்வான்களின் நாவில் குடி கொள்ளும் நாளே நம் சைவத்துக்கு நன்னாளாகும். இசையரங்குகளிலும், ரேடியோவிலும் ஏனைய எல்லா இடங்களிலும் நாயன்மார்களது இசைப் பாக்கள் நிரந்தரமான இடம் பெற்றுவிடின் நாடு முழுவதும் சைவஇசை முழக்கம் தவருது பரவும். அப்போது படித்தவர்களேயன்றிப் பாமரமக்களும் இக்கீர்த்தனங்களை இயல் இசை எனும் இரண்டிற் காகவும் அனுபவிக்க இயலும். இதனை ஒருமுறை நுகர்ந்த செவிகளும், உள்ளமும், வாயும் இந்த நூலின் தாயாகியபெரியபுராணத்தின் தெவிட்டாத

சுவையை உவட்டாமல் உண்டுகளிக்க வேட்கை கொள்ளும். அப்போது எங்கும் சேக்கிழாரின் இனிய ஆட்சியே பொங்கும்; சிவனடியார் பெருமை புவனமுழுதும் தங்கும்; சைவநல்லுணர்வும், ஆலயப் புனிதமும், சிவன் எனும் தெய்வவழிபாடும் தமிழ் நாடெங்கணும் நிரம்பி இலங்க ஏதுவாகும். அந்தக் கனவை யான் என்றும் கண்டு கண்டு களித்து வருகி றேன். அக்கனவு என்றுநனவாகுமோ? இறைவன் திருவருளே அறியும்! என்ருலும் அக்கனவை நனவாக்க இந்நூல் ஒரு ஆயுதமாக, சாதனேக்கருவி யாக இருக்கும் என்று முழுஉறுதியுடன் நம்பியே இதனைத் திருவருள் துணைபெற்று ஒருவாறு ஆக்கி இன்று உலகிடை உலவ விடுகிறேன். பொது மக்களும், சைவப்புனிதர்களும், இசைவாணர்களும் இதுபோன்றதொரு உயர்ந்த லக்ஷியத்தையடைய இம்முயற்சி வெற்றிபெறத் தம்மாலான பேருதவி களையெல்லாம் செய்தருளுமாறு வணக்கத்துடனும் தாழ்மையுடனும் உரிமைபற்றி மன்ருடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் இலங்கும் சிவபெருமான் திருவடிகட்கு அடியேன் சமர்ப்பித்துள்ள காணிக்கைகளுள் இந்நூல் இரண் டாவதாகும். இதற்கு முந்தியது கீதத்தமிழ். அந் நூல் நம்தமிழ்நாட்டில் பொதுவாகவும் இசையுலகில் சிறப்பாகவும் எவ்வாறு வரவேற்கப்பட்டுள்ளது என்பதை இந்நூலின் இறுதியில் அச்சிடப்பட் டுள்ள அபிப்பிராயங்களிலிருந்து நேயர்கள் அறிந்து

கொள்ளலாம். அதைப்போலவே இரண்டாவதாக இன்று வெளிவரும் இந்த இசைநூலும் வரவேற்கப் படின், அந்நன்றி அடியேன் சைவத்துக்கும், தமிழுக்கும், இசைக்கும் செய்யும் இதுபோன்ற சிறு தொண்டுகள் மேன்மேலும் பெருக ஆதரவளிப்ப தொன்றாகும். இசைவாணர்கள் இதை மனமுவந்து பாடிமகிழ்ந்தும் பிறரை மகிழ்வித்தும் பயன்எய்து வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கூடிய சீக்கிரம் இந்நூல் தக்க ஸ்வர அமைப் புடன் வெளிவர இறைவன் அருள்புரியவேண்டும். இந்நூல் இவ்வடிவத்தில் வெளிவரத் தமது இசைக் கலைநுட்பத்தோடு இயன்ற உதவி செய்த திருவை யாறு அரசர் கல்லூரி இசையாசிரியர் திரு. ப. சுந்தரேசன் அவர்களுக்கு என்நன்றி உரியதாகும்.

இந்நூலுக்குத் தக்கதொரு முன்னுரையைத் தமது உடல்நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் எழுதியுதவி என்னை ஊக்குவித்த மகாமகோபாத் யாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர் கட்கும், மதிப்புரைகள் எழுதி உதவித் தங்களது மனப்பூர்வமான ஆதரவை யளித்தருளிய பல பெரியோர்களுக்கும் அடியேன் என் நன்றியைப் பன்முறை செலுத்திப் பணிகின்றேன்.

இவ்வளவு ஆதரவிருந்தும், காலத்தாற் செய் யும் உதவியை எக்காலத்தும் செய்துவரும் கருணை மிக்க தருமையாதீனத்தின் பேருதவி யின்றாயின் இந்நூல் இன்று வெளிவந்துலவ இடமே இருந் திராது. தருமையாதீனத்தின் அருட் பீடத்தில்

25-வது மகா சந்நிதானமாய் எழுந்தருளியிருந்து சைவச் செங்கோல் செலுத்திச் சமயம் வளர்த்துத் தமிழைப்பேணித் தெய்வத்தொண்டினைத் தினமும் புரிந்துவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், அடியேன் பால்வைத்த அருளாலும் அடியார்பால் வைத்த அன்பாலும் தம் திருவுளம் கொண்டு இந்நூலை இவ்வடிவில் அச்சியியற்றிஉலகிற்குதவ முன் வந்த கருணைத்திறத்திற்கு யான் மட்டுமேயன்றி தமிழ்நாடும சைவஉலகும் யாண்டும் கடப்பாடுடையன. அவர்களது பேரருட்பெருங் கருணையின் விளைவால் இந்நூல் இத்தருமையாதீனத்தின் 24வது மகாசந்நிதானமாய் ஆட்சிபுரிந்து சைவத்துக்கு ஆக்கம் தந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் நான்காவது குருபூசைத் திருநாளாகிய இன்று அவர்களின் நினைவு மலராக வெளியிடப் பெறுவதும் அடியேன் பெற்ற அரும்பேறே!

இந்நூல் இப்போது இவ்வடிவில் வெளிவர ஒல்லும்வாயெல்லாம் உதவி புரிந்த உண்மை யன்பர்கள் பலருக்கும் மீண்டும் ஒருமுறை என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வாழ்க தருமை யாதீனம்! வாழ்க சைவம்!!
வாழ்க சீர் அடியாரெல்லாம்!!!

தஞ்சை,
5—6—1949.

கே. எம். பாலசுப்பிரமணியம்.

உ

குருபாதம்

திருத்தொண்டர் கீதம்

முன்னுரை

மகாமகோபாத்தியாய, பண்டிதமணி,

மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

(ஆசிரியர்: திருவாசகம் கதிர்மணிவிளக்கம்)

மகிபாலன்பட்டி.

திருவாசகம் கே.எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி. எல். அவர்கள் இயற்றிய திருத்தொண்டர்கீதம் என்னும் இவ்விசைத்தமிழ்நூல், தமிழிசை ஆக்கங் கருதி முயலும் இக்காலத்தில் வெளிவருதல் பாராட்டத்தக்கது. இராக, தாளங்களுடன் இசை (சுரம்) அமைத்துப் பாடப்படுவது இசைத் தமிழாகும். தேவாரப்பாடல்கள் இம்முறையிலமைந்த இசைத் தமிழாகும். இசைத்தமிழ்ப் பாடல் இயற்றுவோர்

இயனூல்களிலும் தேர்ச்சி பெற்றவராயிருத்தல் நலம். இயற்றமிழிலக்கணத்தில் பிழை படாமல் இசைப்பாடல் இருத்தல் வேண்டும். இசைப்பாக்கள் ஆண்டவனையும், அவன் அருட்செயல்களையும், அடியார் மாண்புகளையும், அவர் அன்புச்செயல்களையும் பற்றி வெளிவருதல் பெரிதும் நலம்பயப்பதாகும். "அளப்பில கீதம் சொன்னார்க் கடிகள் தாம் அருளுமாறே" என்றபடி திருவருட்பேற்றிற்கு இசை சிறந்த சாதனமா மென்ப. காமத்தைப்பற்றிய இசைப்பாக்கள் தமிழிற் பலவுள்ளன. இசை, உயிர்போலச் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையது. கடவுளைப்பற்றியது கடவுட்பத்தியையும், காமத்தைப்பற்றியது காம வேட்கையையும் விளைவிப்பனவாம். இவற்றுட் பின்னது பெருக்கமடைந்த காலத்தில் இசைநூலைக் காம நூல் என்று கூறிய சமயத்தவருமுளர். உண்மையாக நோக்குமிடத்து, இறையன்பைவிளைவித்து ஆண்டவனருட்கு ஓதுவார் கேட்பாரை இடனுக்கவல்லது இசைப்பாவென்பது தெளிவாம். பண்டைக்காலத்திற் சிறந்து விளங்கிய இசைத்தமிழ் வேற்றுமொழிகளின் நெருக்கடியால் மாசு படிந்த மணிபோல இடைக்காலத்தே விளக்கமின்றியிருந்தது. இப்பொழுது தமிழுணர்ச்சி மிகப்பெற்றுத் தமிழ்நாட்டில் தமிழிசையே வளரவேண்டுமென்னும் உண்மை தமிழ் மக்கள் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது. இவ்வமயத்தில் நல்ல தமிழில் இசைப்பாக்கள் வெளிப்படுதல் இன்றியமையாததொன்று.

இதனை நன்குணர்ந்த நண்பர் திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் இக்கீத நூலை ஆக்கியளித்தனர். பெரும் பாலும் தமிழ் இசைப்பாக்கள் இயல்நூலறியாத இசைவாணரால் இயற்றப்பட்டிருத்தலின் சிறந்த தமிழ் நடையை அப் பாக்களில் காண்டலரிதாகும். அக்குறை இக் கீத நூலில் பரிகரிக்கப்பட்டது. இந் நூல் இனிய தமிழ் நடையில் நாயன்மார், மாணிக்கவாசகர், சேக்கிழார் இவர்களின் வரலாற்றுச் சுருக்கத்திற் கண்ட தெளிவையெடுத்து விளக்குவது. பெரிய புராணத்துள்ள கருத்துக்களை அடியொற்றிப்பாடப் பட்டிருத்தல் இன்பம் விளைக்கின்றது. சொற்பொருளினிமையோடு இசை நலத்துக்குப் பெரிதும் ஏற்றதாக இப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. அடிகள் (சரணங்கள்) பலவாகாமல் சுருங்கியிருத்தல் இசையாளர்க்குப் பெரிதும் நலம் பயப்பதாகும். இதனைச் சுரக்குறிப்புகளுடன் வெளியிடின், பயில்வார், பாடுவார் எளிமையில் இசை அமைப்பை அறிந்துகொள்ள ஏதுவாகும். சுருக்கமும், தெளிவும், இனிமையும் பொருந்தப் பாடும் இசைப் பாக்களே மக்களால் விரும்பிக் கேட்கக் தக்கனவாம். அம்முறை இக்கீதநூலில் அமைந்திருக்கக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலாசிரியர் ஆங்கில நூல்களிற்றிளைத்து, அருந்தமிழ்ப்பனுவலிற்றோய்ந்து, திருவாசகச் செம்பொருளில் ஈடுபட்டுப் பெற்ற அநுபவ விளக்கமாக இக் கீதநூல் அமைந்திருத்தலின், இதனை முத்தமிழுலகும் வித்

தகம் போற்றி, விரும்பியேற்று, பத்திமை மிக்குப் பயனெய்து மென்னும் நம்பிக்கை யுடையேன். இந்நூலாசிரியர் இன்னோரன்ன பத்திநூல்கள் பல வாக்கித் தமிழுலகிற்கீந்து நீடுவாழும் வண்ணம் இறையருளை வேண்டுகின்றேன். !

“ அசைவில் செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல,
இசை முழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெருக ! ”.

தமிழிசை வாழ்க!

மகிபாலன்பட்டி,
23—5—1949.

மு. கதிரேசன்



அணிந்துரை

யோகி சுத்தானந்தபாரதியார் அவர்கள்

பதி, பசு, பாச விளக்கமான சைவசமயம் எல்லாச் சமயங்களையும் தன்னுட்கொண்டுள்ளது; படிப்படியாக ஆன்மாவைத் தூய்மையாக்கிச் சுத்தான்மாவாக்கி, அதில் அருட்சக்தியிறங்கி, அருளால் சிவனறிவும் அறிவால் சிவத்துவமும் அடையச் செய்வது சித்தாந்தம். இந்தச் சிவத்துவத்தின் சாதன முறைகள் மெய்கண்ட சாத்திரங்களில் விளங்கும்: பாட்டு, பணி, இரண்டும் அச்சாதனங்களில் முதன்மையாகும்; மாணிக்கவாசகர், சம்பந்தர், சுந்தரர் இம்மூவரும் பரமனைப் பாடிப் பரவினர்; அப்பர், பாட்டுடன் பணியும் செய்தார். மற்ற நாயன்மார்கள் எல்லாம் சிவநேசவுறுதியில் வாழ்ந்தனர்; அந்த உறுதியைச் சோதிக்கப் பல இடர்கள் குறுக்கிட்டன; அனைத்தையும் தாண்டித் திருத்தொண்டர் சிவவைராக்கியராக விளங்கினர். அத்தகைய சிவனடியார்க்குச் சுந்தரர் வணக்கம் செலுத்தித் திருத்தொண்டத்தொகை பாடினர். அதன் விரிவே சேக்கிழாரின் பெரியபுராணம். தொண்டர் பெருமையும், அருமையும், உரிமையும் பெரியபுராணத்தில் தெளிவாக விளங்கும்.

திருத்தொண்டர் கீதம் என்ற இந்த இசைப் பாடல்நூல் பெரிய புராணமும், மாணிக்கப்பாட்டும்

விளக்கும் திருத்தொண்டரை இசைப்படம் பிடித்துக் காட்டுகிறது. இதைப் பாடியவர் திருவாசகம் பாலசுப்பிரமணியனார். இவர் தூய சிவநேசர்; தமிழுக்கே வாழும் நன்னெறித் தமிழர்; காலத்திற்கேற்ற கல்விசிறந்த புலவர். இக் கீதம் இவர் செய்துள்ள பதி புண்ணியங்களுள் ஒன்று.

தமிழர் இக்கீதங்களைப் பாடித் திருத்தொண்டர் வழியே ஒழுகிச் சிவநேயச் செல்வராகுக! ஓம் சிவம்!!

சுத்தானந்தபாரதி.

மதிப்புரைகள்

1

இராவ்பகதூர்

சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B. A., B. L.

அவர்கள்

முன்னாள் அறநிலையப் பாதுகாப்பாளர்

[கோவை]

திருவாளர் திருவாசகம் பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்றியிருக்கிற 'திருத்தொண்டர் கீதம்' என்ற இசைப்பாநூல் பத்திச்சுவை சொட்டச் சொட்டப் பாட்டின் இசை சொட்டிக்கொட்டும்நூல். அது காலத்தின் போக்கை ஒட்டி எழும்பியுள்ள தோர் அரியநூல். இதுகாறும் இயற்றமிழ் பாடி மகிழ்ந்த பாவாணரும் இசைத்தமிழைப் போற்றும் நாள் வந்திருக்கிறது. தேசீயக் கருத்துக்களை அருமையான பாக்களில் வெளியிட்டு நாட்டிற்குப் பணிசெய்ய முன்வரும் கவிஞர்கள் தற்போது இசைத்தமிழிலேயே தம் கருத்துக்களைப் பிணைத்து நாட்டுமக்களின் உணர்ச்சிகளைத்தூண்டி எழுப்பி வருகிறார்கள். அன்னார்களுக்கே பேரும் புகழும் வருகின்றன. நாட்டின் போக்கை ஒட்டி, சமயச் சார்பில் ஊழியம் செய்பவர்களும் அதே போக்கில் செல்லவேண்டாமா?

திருவாசகம் அவர்கள் நாட்டின்போக்கை நன்கு உணர்ந்தவர்கள். செந்தமிழ்நாட்டின் பற்பல இடங்களுக்கும் சென்று தம் அருமையான சொற்பொழிவுகளால் மக்களிடை சைவ அன்பைப் பெருக்கிவருபவர். தம் பேச்சுக்களின் இடையே அழகிய இசைப்பாடல்களை எடுத்து வீசுவார். அப்போது மக்களிடை அவ்விசைப்பாக்கள் செய்யும் தீவிர வேலையை நன்கு அறிவார். அந்த அனுபவத்தை ஒட்டியே திருத்தொண்டர்களுடைய பெருமையைப் பொதுமக்கள் அறியும்பொருட்டுச் சுருங்கிய வகையில் அதில் சிறந்த பண்புகளை இசையில் தூயதமிழில் அடக்கிவைத்திருக்கிறார். இசைக்கு இசையும், கருத்துக்குக் கருத்தும், பத்திக்குப் பத்தியும் அடங்கியுள்ளன. இப்பாடல்கள் தற்கால மக்களை நல்ல பத்திச்சுவைக்கு இழுக்க வல்லவைகள். இந்நூலைத் தமிழ்மக்கள் பெரிதும் ஆதரித்து அதன்முழுப்பயனையும் பெறுவார்களாக!

கோவை,
25—5—49.

கோவைகிழார்.

2

உயர்திரு. சிவக்கவிமணி

C. K. சுப்பிரமணியமுதலியார் அவர்கள் B.A.F.M.U.

திருத்தொண்டர் புராண விரிவுரை ஆசிரியர், கோவை.

திருத்தொண்டர் கீதத்தின் பிரதி ஒன்று இதனாசிரியர் எனது அரிய நண்பர் திரு. திருவாசகம் K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் அன்புடன் என் பார்வைக்கு அனுப்பினார்கள். அதுபற்றி நன்றி செலுத்துகின்றேன். கீதங்கள் மிக அழகாக அமைந்துள்ளன. எளிய நடையிலும் அழகிய சந்த யாப்பிலும் உள்ளன. இதன் ஆசிரியரது இயல்பாகிய இசையுணர்ச்சியினால் அவ்வக்கீதங்களுக்குரிய இராக தாளங்களையும் விளக்கி அமைத்துள்ளார்கள். ஒவ்வொரு நாயன்மாருக்கு ஒவ்வொரு கீதமாகப் பல்லவி, அநுபல்லவி, சரணம் இவற்றுள் சரித சாரம் அழகாக விளங்கும்படி அமைந்துள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களது சரிதங்களை இசையுடன் பாடி அனுபவிக்கும் ஆசையுடைய அன்பர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. ஏறக்குறைய எல்லா நாயன்மாரது சரித சாரமும் ஒரேசரணத்துள் வரும்படி தொடுக்கப்பட்டிருப்பதும் இந்நூலின் வேறொரு அழகாகும். இறுதியில் மாணிக்கவாசகருக்கும், நம்பியாண்டார் நம்பிகளுக்கும், சேக்கிழார் பெருமானுக்கும் ஒவ்வோர் கீதமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதன் ஆசிரியருக்குத் தமிழுலகும் சைவவுலகும் மிகவும் கடமைப்பட்டுள்ளன. இந்நூல் இனிது நிலவி இன்பம் பயந்து நீடு நிகழ்வதாக!

சேக்கிழார் நிலயம்
கோயம்புத்தூர்
17—5—49

C. K. சுப்பிரமணிய முதலியார்

3

உயர்திரு. திவான் பகதூர்

T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் M. A. B. L.
(President, Public Services Commission, Madras.)

எனது அன்பிற்குரியநண்பர் திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய திருத்தொண்டர் கீதங்களைப் பார்வை இட்டேன். மிகவும் அழகும் கவர்ச்சியும் வாய்ந்துள்ளன. ஒவ்வொரு கீதமும் ஒவ்வொரு திருத்தொண்டர் சரித்திரத்திலும் ஆணியாயுள்ள நுட்பமான பொருளைத் தழுவி இருக்கின்றது. திருத்தொண்டர் புராணத்திற்கு இந்நூல் ஒரு திறவுகோல்; அதுவும் இனிமையான கீதத்தில் அமைந்துள்ளது. படிப்போர், கேட்போர் மனதைக் கவரக் கூடியதாயுள்ளது. நம் நண்பருடைய திறமையும், இறைவனிடம் அவருக்குள்ள அன்பும், தொண்டர்களிடமுள்ள பக்தியும் இந்நூலின்மூலமாய் நன்கு விளங்கும்; நண்பர் இந்தநூலின் மூலமாகச் சைவ சமயத்திற்கு ஒரு அரும் பெரும் தொண்டு செய்திருக்கிறுர்.

20—5—49 **T. M. Narayanaswami Pillai.**

4

உயர்திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B. A. B, L.
பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.

அன்பர் திரு. K, M. பாலசுப்பிரமணியனுரை அறியாதார் தமிழ்நாட்டில் அறியாதாரே. மணிவாசகனுர் திருவாசகத்தைத் தமக்கே ஆக்கிக் கொண்ட பெருமகனுர்

அவர். திருத்தொண்டர் கீதம் என்னும் பெயரால் அவர் அளித்துள்ள இசையமுதம் சிந்தைக்கினிது, செவிக்கினிது. சிவனடியார் பெருமையை இன்னிசையால் இயம்பும் இந் நூலைத் தமிழுலகம் ஏற்றுப் போற்றி இன்பமும் பயனும் எய்துமாக!

20—5—49 ரா. பி. சேதுப்பிள்ளை.

5

திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான், "பரசமயகோளரி"

உயர்திரு கெ. ஆறுமுக நாவலர் அவர்கள்

"தொண்டன்" ஆசிரியர், நாகர்கோயில்.

திருவாசகம் உயர்திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்றிய திருத்தொண்டர் கீதம் என்னும் நூலினைப் படித்துப் பார்த்தேன். பாடல்கள் திருத் தொண்டர்களின் செயற்கரும் செயல்களின் செயலாற் றல்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பெற்றி வாய்ந்தனவாய் இலங்குகின்றன. பத்திச் சுவை ஒவ்வொரு பாடல்களிலும் கனிந்து மிளிர்வது ஆசிரியரின் உளப் பாங்கை நன்கு விளக்குகின்றது.

இறையின்பம் நுகர்தற்கு இத்தகைய பாடல்கள் இக் காலத்துக்கு இன்றியமையாதன என்பதை எவரும் ஒப்பு வர். இசைவாணர்களும் பிறரும் இத்தகைய அருட் பாடல்களைப் பாடி உய்வடைவார்களாக!

இலக்கிய சமயச் சொற்பொழி வாற்றுவதில் வல்ல இவ் ஆசிரியர் இசை உலகும் உய்வடையச் செய்த இப் பணியைப் பெரிதும் பாராட்டுகிறோம். இதனைத் தமிழ்

உலகு ஏற்று இதில் இலங்கும் பாடல்களை மாந்திப் பய னடைக. பெருமக்களும் மடாதிபதிகளும் இதன் ஆக்கத் துக்கு ஆவன புரிவது தலைசிறந்த ஓர் கடப்பாடாம்.

இந்நூல் அச்சாகிவெளிவர ஆதரவளித்த தருமையாதீன மகாசந்நிதானத்தின் திருக்கருணை எவராலும் போற்றுதற்கு உரியதே.

திருத்தொண்டர் கீதம் பாடி அனைவரும் திருவருள் பெறுவாராக! வளர்க தருமை ஆதீனம்! வாழ்க நம் இசைப்புலவர்!!.

18—5—1949. கெ. ஆறுமுக நாவலர்.

6

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்
உயர் திரு.

ஔவை சு. துரைசாமிபிள்ளை அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

சைவத்திரு. திருவாசகம் K. M. பாலசுப்பிரமணியம் அவர்களைச் சைவவுலகும் தமிழுலகும் இன்று ஒரு சிறந்த சிவத்தொண்டரும் தமிழ்த்தொண்டருமாகப் போற்றிப் பாராட்டி வருகின்றன.

ஆசிரியர் அவர்கள் 'கல்லைப்பிசைந்து கனியாக்கும்' மணிவாசகங்களைப் பலகாற் பயின்று பண்பட்ட செந் தமிழால் சேக்கிழார்பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணத்தைச் செவ்விதிற் பயின்று, திருத்தொண்டர் களின் தொண்டின் அருமைப்பாடுகள் அனைத்தும் எல்லார்

உள்ளத்துள் என்றும் இருக்கவும், எல்லார் நாவிலும் இனிய ஓசைவழியாகத் தவழவும் திருத்தொண்டர் கீதமான இந்நூலைச் செய்திருக்கிறார்கள்.

நானும், என் நண்பர் க. வெள்ளைவாரணம் அவர்களும் இந்நூலின் அருமையையும் இனிமையையும் புள்ளிருக்கு வேளூரிலிருந்து முற்றும் கேட்டோம். தமிழ் உலகிற்குக் கடவுட் செவ்விகாண இத்தொண்டு இன்றியமையாதது.

இந்நூலின் நலங்கண்டுணர்ந்த தருமையாதீன ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இந்நூலை வெளியிட்டருள் புரிந்தது சைவவுலகும் தமிழுலகும் பாராட்டற்குரியசெய்தியாகும்.

17—5—1949 ஔவை சு. துரைசாமி.

7

தருமபுர ஆதீன வித்வான், "பாலகவி" வயிநாகரம்

வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்

தேவகோட்டை.

திருவாசகம் ஓர் இன்பஊற்று. அதில் தோய்ந்த உண்மைச்சிறப்பு அன்பர் திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்களுக் குரியது. பாலசுப்பிரமணியம் என்னும் இயற்பெயரின் முன்னர் "திருவாசகம்" என்னும் இசைப் பெயரை வைத்துத் "திருவாசகம் பாலசுப்பிரமணியம்" என உலகம் அவர்களை வழங்குவதொன்றே அவர்களின் பெருமைக்குச் சான்று பகருவதாகும்.

இக் காலத்துத் தமிழ்இசைப் பாடல்களிற் பெரும்பாலன இயலறிவு உடையாரால் இயற்றப் படாமையினுல்

பிழைமலிந்தனவாகவே காணப் பெறுகின்றன. தனித்த இயலறிவும், தனித்த இசையறிவும் இசைப் பாடல்களை யாத்தற்குப் பயன்தருவனவாகா. எனவே இயலிசையறிவு பெற்றாரின் இசைப் பாடல்களே மதித்தற்குரியனவாகும்.

அன்பர் திருவாசகம் பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்றிய திருத்தொண்டர்கீதப் பாடல்களைப் படித்துப் பார்த்தேன். "இக்கால நிலையில் இவைபோன்ற இசைப் பாடல்கள் சமயவளர்ச்சிக்குப் பெருந்துணைசெய்வன" எனக்கருதினேன். இயலறிவும் இசையறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இவர்களது இசைப்பாடல்களின் வளம் பெரிதும் பாராட்டற்குரியது.

திருத்தொண்டர்களைப் பற்றிய இவ்விசைப்பாடல்கள் தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமானது திருத்தொண்டர் புராணத்தைச் சுருக்கி விளக்குவனவாக அமைந்திருப்பது, நாயன்மார்களது வரலாறுகளை இசையுலகத்தாரும் மறவாது சிந்தனையில் வைத்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பளிப்பதாகும்.

ஆசிரியரது திருமுறைப் பயிற்சியும், உண்மையில் ஈடுபட்டுருகும் உள்ளமும், இசைத்துறையில் பொருந்திய அறிவும், இறைவனது திருவருளும் கூடி இந்நூல் வடிவத்தை அடைந்தன என்று சொல்லலாம்.

திருத்தொண்டத் தொகையின் வழியே திருத்தொண்டர் திருவந்தாதியும், அதன் வழியே திருத்தொண்டர் புராணமும், அதன்வழியே திருத்தொண்டர் புராணசாரம், திருத்தொண்டர் திருநாமக்கோவை யாதிய நூல்களும் வெளிவந்தன. இம்முறையைப் பின்பற்றியே

நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் திருத்தொண்டர் கீதத்தை நமக்குத் தந்துள்ளார்கள்.

இசைப்பாடல்களிற் பல யானறிந்தவரை தாளநிலை, இசைநிறை யாகியவற்றின் பொருட்டு நெடில், குறில் ஒற்றெழுத்துக்களை அவ்வவற்றின் மாத்திரையளவுகளின் நீட்டி ஒலிக்கும் நிலையிலேயே காணப்பெறுகின்றன. அவ்வாறு ஒலிக்குங்கால் சிற்சில சொற்கள் தத்தம் உண்மைப் பொருள்களை வெளிப்படுத்தாது மயங்க வைப்பதோடு, விகார நிலையையும் அடைந்து விடுகின்றன.

இயலிசைத்துறைகளில் மேற்குறித்த எவ்விதக் குற்றமும் சாராத சிறப்புடையதாகத் திருமுறைகளிற் பயின்ற செஞ்சொற்களால் இந்நூலை ஆக்கித்தந்த அன்பர் திருவாசகம் பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தமிழுலகும் சைவ உலகும் என்றும் நன்றி செலுத்துங் கடமையுடையன. அவர்கள் முயற்சி வெல்க! நலம் பெருகுக!!.

தேவகோட்டை, 19—12—48. } இராமநாதன் செட்டியார்.

8

உயர்திரு S. இராமச்சந்திரப் பத்தர் அவர்கள் B.A.
சப்மாஜிஸ்திரேட், தஞ்சை.

திருஞான சம்பந்தப்பெருமான் நம்நாட்டில் அவதரித்ததின் பயனை விளக்கும் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் "திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேறவும், மிசையுலகும் பிற வுலகும் மேதினியே தனி

வெல்லவும், அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்லவும்'' தோன்றினார் என்று கூறிய தோடு அமையாது, "இசை முழுதும் மெய்யறிவும் இடங் கொள்ளும் நிலை பெருகவும்'' தோன்றினார் என்று இயம்பு கின்றார். கடவுள் மணங்கமழும் இசைக்கலையே மக்கட்குப் பயனுடையதாகும் எனபது ஆன்றோர் முடிபல்லவா? அம்முடிபிற்கேற்ப, 'இசை முழுதும் மெய்யறிவு இடங் கொள்ளும்படி' ஆக்கப் பெற்ற 'திருத்தொண்டர் கீதம்' என்னும் இந்நூல், இன்று தமிழ் மொழிக்கு அணிசெய் தும், சைவத்திற்கு அரண்செய்தும் வெளிவந்துள்ளது.

அகப்பொருள் பற்றிய இசைப்பாடல்களைப் பதங்கள் என்றும் புறப்பொருள் பற்றிய இசைப்பாடல்களைக் கீர்த்தனங்கள் என்றும் நம் நாட்டில் வழங்கு கின்றனர். முத்துத்தாண்டவர் பதங்கள் என்றும் கீர்த்தனங்கள் என்றும் வழங்குதல் காண்க. சைவநெறியில் நின்ற அறுபான் மும்மைத்தொண்டர்கள் துதியாக இந்நூலில் உள்ள கீர்ததனங்கள் இயற்றப்பெற்றுள்ளன. அவ்வத் திருத்தொண்டர்களின் சிறந்தசெயல்கள் ஆங்காங்கு செவ்விய முறையில் அமைந்துள்ளன.

தொண்டர் சீர் பரவும் இச்செந்தமிழ் இசைப்பாக் களை இந்நூலின் ஆசிரியரும், என் கெழுதகை நண்பரு மாகிய அட்வகேட், திருவாளர் திருவாசகம், K. M. பால சுப்பிரமணியம் அவர்களே இன்னிசையோடு மனமுருகிப் பாடக்கேட்டின்புறும் பேறு அண்மையில் எனக்கு வாய்த்தது. இப்பாக்களில், பாடும் போக்கிலேயே வருத்தமின்றி எதுகை மோனைகள் அமைந்துள்ளன. பத்திச் சுவை மலிந்தும், ஓசைநயம் மிகுந்தும், சொற் செறிவு பொருட்செறிவு வாய்ந்தும், இந்நூலின் பல்லவி,

அநுபல்லவி, சரணங்கள் செல்லுகின்றன. கவிச் சக்ரவர்த்தி கம்பர் பெருமான் கூறியாங்கு, பொருள்வழி சொல் செல்ல, சொல்வழி தொடை அமைய, தொடைவழி இன்னிசை நடக்க, இக்கீர்த்தனங்கள் பற்பல அணிக ளோடு நல்லியற் கவிஞர் பாக்களென விளங்குகின்றன,

தமிழ் மொழியில் இயற்றப்பெறும் பாடல்கள் எல்லாம் தமிழிசைப் பாடல்கள் ஆகா. "யாமொடும் கொள்ளா, பொழுதொடும் புணரா, பொருள் அறிவாராப்" பாக்கள் எத்தனையோ தமிழில் அண்மையில் தோன்றி உலவுகின்றன. அங்ஙனமின்றித் தமிழிசைப் பண்புகள் யாவும் அமையத் தமிழ்மொழியில் ஆக்கப்பெற்ற சிறந்த தமிழிசைப்பாடல்களாகவே இப்பாக்கள் மிளிர்கின்றன.

பெரிய புராணம் முதலிய அரும்பெரும் நூல்களைப் பயிலும் வாய்ப்பு இல்லாத பொதுமக்களிடையே யாவரும் விரும்பும் இசையில் திருத்தொண்டர் பெருமையைத் தெளிவுறஉணாத்தி, குருலிங்க சங்கமபத்தியில் அன்னுரை ஈடுபடுத்தவும் இந்நூல் பெரிதும் துணைபுரியும். இசை வாணர்கள் இப்பாக்களை நன்குபயின்று பாடுதல் பயன் உடைய செயலாகும்.

தமிழ் மொழியை வளர்க்கின்றோம், தமிழிசையை வளர்க்கின்றோம், சைவசமயத்தை வளர்க்கின்றோம், என்று கூறித் தம் வயிறுவளர்த்துத் திரியும், இலக்கண இலக்கிய, சமய அறிவில்லாத சில போலிகள்போல் அல்லாது, இந்நூலாசிரியர் கீதத்தமிழ், மாணிக்கவாசகர் மாலை முதலிய சிறந்த நூல்களை இயற்றி வெளியிட்டும் கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய திருவாசகம், பெரிய புராணம், திருக்குறள் இவைபற்றிய சொற்பொழிவுகள்

ஆற்றியும் இடையருது சைவத்திற்கும் தமிழுக்கும் உண்மைத் தொண்டுபுரிந்து வருகின்ருர். பொன்னே கொடுத்தும் புணர்தற்கரிய இத்தொண்டர் பெருந்தகையை நம் தமிழ்நாடு நன்கு பயன்படுத்திக்கொள்ளும் என நான் நம்புகிறேன். இவ்வாசிரியர் நீண்ட ஆயுளுடன் எல்லா நலனும் பெற்று விளங்கவும், இதுபோன்ற பல நூல்களை இயற்றி வெளியிடவும் அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அருளாட்சி புரிந்துவரும் தருமையாதீனத் தலைவர் அவர்கள் இந்நூலை வெளியிட்டருளிய அருட்செயலுக்குத் தமிழ்நாடு என்றும் கடப்பாடுடையதாகும். தமிழ் வாழ்க! சைவம் வெல்க!!

தஞ்சை
20—1—49.

S. இராமச்சந்திர பத்தர்.

9

உயர்திரு. வித்துவான். மா. இராசமாணிக்கம்
B, O. L., L. T., M. O. L. **அவர்கள்**

(ஆசிரியர்: பெரியபுராண ஆராய்ச்சி)

தமிழ்ப்பேராசிரியர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

என்மதிப்புக்குரிய நண்பர் திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் இயற்றியுள்ள திருத்தொண்டர் கீதம் என்னும் நாயன்மார் கீர்த்தன நூலை முழுதும் படித்துப்பார்த்தேன். ஒவ்வொரு நாயனுர் வரலாற்று உயிர்நாடிச்செய்தியையும் வற்புறுத்தி ஒவ்வொரு கீர்த்தனையும் பாடப்பட்டுள்ளது. இஃது

ஆசிரியரது பெரியபுராணப் புலமையை நன்கு வெளிப் படுத்துகிறது; சிவநெறியின்பால் அவருக்குள்ள பெரும் பற்றினையும் வெள்ளிடைமலை போல் விளங்கப்படுத்து கிறது. ஆசிரியர் இத்தகையசிவப்பணிகளை மென்மேலும் செய்தருளத் திருவருள் துணையை வேண்டுகின்றேன்.

விவேகானந்தர் கல்லூரி
சென்னை.
8—5—49.

மா. இராசமாணிக்கம்.

10

"சித்தாந்தப் பேராசிரியர்"

உயர்திரு ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்

தூத்துக்குடி.

எனது அருமை நண்பர் திருவாளர் திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. எ., பி. எல். அவர்கள் இயற்றிய திருத்தொண்டர்கீதம் என்னும் நூலைப் பார்க்கும் பேறுபெற்றேன். சைவசமயத்தில் இறைவன் பாற்கொள்ளவேண்டிய அன்பைப் போலவே அடியார்கள் பாலும் அன்பு செய்யவேண்டும் என்பது சிறந்த விதி யாகும். இயல்பாகவே எமது நண்பர் திரு. கே. எம். பால சுப்பிரமணியம் அவர்கள் திருவாதவூரடிகள் பாலும் அடிகள் இயற்றிய திருவாசகத்தின் பாலும் சிறந்த அன்புடையார் என்பது, அவரது பெயருடன் 'திருவாசகம்' என்னும் அருமைச் சொல்லையும் என்றும் இணைத்து இவ் வுலகம் பேசுவதிலிருந்து இனிது விளங்கும். மேலும் அந்த அன்பு வளர்ந்து திருத்தொண்டர் புராணத்துட் கூறப் படும் தனி அடியார் தொகை அடியார் பாலும் திகழ்

கின்றது. அவர்கட்கு வாய்க்கப்பெற்றுள்ள கல்வி நலத்துடன் அவர்கள் முற்பிறப்பில் இறைவனுக்குத் தேன் முழுக்காற்றிய தவத்தினுல் இப்பிறப்பில் தேனினும் இனிய பாக்களைப்பாடும் அருமைப்பேறும் கிட்டியிருக்கின்றது. அப்பயனுல், திருத்தொண்டர் புராணத்துட் கூறப்படும் அடியார் வரலாறுகளைத் தெரிவிக்கும் முறையில் ஒவ்வொரு அடியாருக்கும் தனித்தனி பல்லவி, அநுபல்லவி, சரணம் இயற்றி அது ஒருநூலாகவெளியிடப் பெறுகின்றது. இயற்கையில் பாடும் நலன் வாய்க்கப் பெற்றுள்ள பாடகர்களும் பிறரும்பாடிக் ''கீதத்தைமிகப்பாடும் அடியார்கள் பால்'' வீற்றிருந்து அருள்பாலிக்கும் இறைவன் திருவருட்கு உரியவர்கள் ஆகுக. எமது நண்பர் திருவாளர் கே. எம் பாலசுப்பிரமணியம் அவர்கள் ''அளப்பில கீதம் சொன்னுர்க்கு அடிகள்தாம் அருளுமாறே'' என்னும் திருவாக்கின்படி, வேண்டும் அருட்செல்வம் பெற்று இனிது வாழ்வார்களாக!

தூத்துக்குடி,
18—5—49.

ந. சிவகுருநாதன்.

11

உயர்திரு. கவியரசு

R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்

கரந்தை.

[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

திருத்தொண்டர் பேரிசையாம் தெய்வத் தேனைச்
செந்தமிழின் இசையாம்பொற் செப்பில் ஞாலம்
அருத்திமகிழ் பேரார்வம் அகத்தே மேவ
அன்புடனே இன்பவிருந் தளித்தான் வாழி!
கருத்திலுறும் சிவப்பற்றும் கனிவை யார்க்கும்
கனிந்ததிரு வாசகத்தால் காட்டும் தொண்டன்
பருத்தபுலம் உரைவன்மைப் பண்பு சான்ற
பாலசுப் பிரமணிய பாவல் லோனே!! 1.

தருமபுர ஆதினச் சந்நி தானம்
தமிழ்த்தாய்சை வத்தாயர் தலைமை மைந்தர்!
பெருமையுறு தமிழ்சைவக் கலைகள் பேணும்
பிறங்குதமிழ்ப் புலவர்சிவத் தொண்டர்பேறு!!
உரிமையுறு தொண்டர்நூல் உயர்ச்சி நோக்கி
உலகமெலாம் பயின்றின்பம் உறவே அச்சாம்
தருமமதைத் திருவுளத்தே தாங்கி நின்றார்!!!
தமதுபுகழ் உலகமெலாம் தாய தன்றோ? 2.

கரந்தை, 25—5—49. } கவியரசு. R. வேங்கடாசலம் பிள்ளை.

ஸ்ரீ மெய்கண்டார்

உ

குருபாதம்

திருத்தொண்டர் கீதம்

1. தில்லைவாழந்தணர்

"தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்".

—சுந்தரர்.

"செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உம்பரின் ஊரெரித்த
அப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த
துப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே."

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: நாட்டை
36வது சலநாட்டையிற் பிறந்தது,

தாளம்: ஆதி.

பல்லவி

தில்லை வாழந்தணரின் எல்லையில்லாப் புகழ்தான்
சொல்லல் எளிதோ சொல்லுவாய்! துணைநெஞ்சமே.
சொல்லல் எளிதோ! சொல்லுவாய். (தி)

அநுபல்லவி

மல்லல்வேதங்களாலே மன்றுள்நாதனைப்போற்றிச்
செல்வம் வேறின்றியந்தச் செல்வனே செல்வம்
என்பார் (தி)

சரணம்

தென்தமிழின் பயனாய்ச் சேர்ந்த தொண்டத்
தொகையின்
மூன்திகழும் புகழ்சேர் மூர்த்திகளாம் பூசுரர்
மன்றுளாடும் ஈசனின் மாசிலா நீறுபூசி
மாநிலத்தே நீற்றொளி தானிறைத்தே ஓங்கிடும்
(தி)

2. திருநீலகண்ட நாயனர்

" திருநீலகண்டத்துக் குயவனுர்க்கடியேன் ".

—சுந்தரர்.

"சொல்லச் சிவன்திரு ஆணைதன் தூமொழி தோள்நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்உமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளொடிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீலகண்டக் குயவனுஞ் செய்தவனே ".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பிலஹரி தாளம்: ஆதி.
29-வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது.

பல்லவி

அடியவர் கட்குத்திரு வோடுதவும் தொண்டர்
அகிலலோ கமும்புகழ் நீலகண்டர் (அ)

அநுபல்லவி

குடிமனைவியார் மூனம் கூறும்ஆணை கேட்டந்தக்
கொடியனையார் இனமே கூடும் பரிசு நீங்கி
(அ)

சரணம்

பொடியணியும் அடியார் போந்துதம் பாலளித்த
புனிதத்திருவோடொன்று போயொழிய மாயமாய்த்
தடிதனைத் தம்மனையும் தாமும் பிடித்தோர்வாவி
தன்னிலே மூழ்கினின்றூர் முன்னின்மேல் வாழ்வை
வென்றூர் (அ)

3. இயற்பகை நாயனர்

"இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தோடி
8-வது மேளராகம்

தாளம்: மிஸ்ரசாபு
எழெண் நடை.

பல்லவி

இல்லையென் றுதளிக்கும் இயற்பகையே! அவர்
எல்லையில் லாவுலகின் மயற்பகையே! (இ)

அநுபல்லவி

மல்லல் உலகிலேதம் சொல்லருஞ் செல்வமெல்லாம்
நல்லடி யவர்க் கெல்லாம் நாளும் உரிமையென்றே
(இ)

சரணம்

கயற்கண்ண ழகின்மனைக் கற்பினள் தன்னை
வேண்டிக்
காதலுடனடைந்த கோதில் தொண்டர்க்களித்து
செயற்கரும் செய்கைசெய்தார்; தீதெனச்சூழும்
உற்றோர்
சிதைவுறச் செய்து தொண்டர் சென்றிடச்
செய்தே வென்றூர் (இ)

4. இளையான்குடிமாற நாயனர்

"இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை மாறன்எங் கற்பகமே.

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: கேதாரகௌளை. தாளம்: மிஸ்ரசாபு.
28-வது ஹரிகாம்போதியிற் பிறந்தது. எழெண்நடை

பல்லவி

இளையான் குடிப்பதி மாறர் எம்மைஎந்நாளும்
இனிதாள வல்லநல் வீரர் புனிதவள்ளல் (இ)

அநுபல்லவி

களையாம லேதொண்டரைக் காதலுடன் வணங்கிக்
கனியாரும் இன்னமுதெக் காலமுமே வழங்கும் (இ)

சரணம்

விளையாட ஈசன்முனம் விழைவார் பசியோடுற
விரைவாகவே இரவில் கரையார் கழனியுறும்
முளையாம்நெல் லுடன்புன்செய் முளையார் குறும்பயிரும்
முறையாய் எடுத்தமுது குறையாதியற்றும் வண்மை (இ)

5. மெய்ப்பொருள் நாயனுர்

" வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன் "

—சுந்தரர்.

" கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன் தன்னை யவனைச் செறப்புகலுந் திருவாய்
மற்றவன் தத்தா நமரே யெனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொ ருளாமென்று பேசுவரே ".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தர்பார்.
22-வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: ஆதி.
இரண்டுகளைச் சவுக்ககாலம்
அரையிட எடுப்பு

பல்லவி

எப்பொருளினும் ஓங்கி இலங்குபொருள் நீறென்றே
மெய்ப்பொருள் நாதர்வென்றுர் மேன்மைப்புகழ்
(எ)

அநுபல்லவி

தப்புத லின்றி ஈசன் தாமரைத்தாள் பணியும்
ஒப்பில் அடியவர்க்கே ஒப்பில் செல்வம்உதவி (எ)

சரணம்

பத்திரம் வாங்கித் தம்மைக் குத்திய பாதகனும்
முத்தநாதனின் வேடம் முன்னியவனைக் காக்கத்
தத்தனிடம் வேண்டித்தாம் அத்தன் அடிசேருமுன்
மெய்த்தவ வேடமேமெய்ப் பொருளெனக் கூறி
வென்றுர் (எ)

6. விறன்மிண்ட நாயனர்

"விரிபொழில்சூழ் குன்றையார்விறன்மிண்டர்க்கடியேன்"

—சுந்தரர்.

" பேசும் பெருமையவ் வாரூரனையும் பிரானவனும்
ஈசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மிண்டனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஆரபி, தாளம்: கண்டஜாதி.
29-வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது திரிபுடை

பல்லவி

விறன்மிண்ட ரைப்போலொரு வீரருண்டோ?—
தொண்டர்
திறன்கண்டு ரைத்தவேறு தீரருண்டோ? (வி)

அநுபல்லவி

நிறங்கொண்ட பாலின்தூய நீற்றடியார் நிறைந்த
நீண்டதே வாசிரியன் யாண்டும் பணியும் அன்பர்
(வி)

சரணம்

சீரூர்தே வாசிரியன் சேருந்திருத் தொண்டரைச்
சென்றுதொ ழாதகன்ற வன்றொண்டர்புற காவர்;
ஆரூர் இறையும்புற காவார் அடியார்க் கென்றே
அறைந்து தொண்டத் தொகைதான் பிறந்திடக்
காரணர் ஆம் (வி)

7. அமர்நீதி நாயனர்

" அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன் "

—சுந்தரர்.

" மிண்டும் பொழிற்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமுந் தன்னையுந்தன்
துண்ட மதிநுத லாளையும் ஈந்த தொழிலினனே ".

— நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ரீதிகௌளை.
22-வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: மிரஸ்சாபு.
ஏழெண்நடை

பல்லவி

கோவணம் தாங்கியாண்டார் அமர்நீதியை
ஆவணம் தாங்கியாண்ட அரனரவர் (கோ)

அநுபல்லவி

மூவர்களும் அறிய முடியாத மொய்ம்மலரின்
சேவடியால் நடந்தே சென்று விளையாடியும் (கோ)

சரணம்

மாயமுடன் மறைந்த மாண்பின்கோ வணத்தின்
நேர்
மற்றொரு கோவணந்தான் உற்றதுலைநேர் நிற்க
ஏயபொ ருள்களோடே எழில்மனைவியும் சேயும்
ஏறும்மற் றொருதட்டில் ஏறிநிற்க அடியார் (கோ)

8. எறிபத்த நாயனர்

" இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கடியேன் "

— சுந்தரர்.

"ஊர்மதின் மூன்றட்ட உத்தமர்க் கென்றோர் உயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொளும் பாகர் உடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு வூரில் எறிபத்தனே".

— நம்பியாண்டார் நம்பி.

இராகம்: சுரட்டி. தாளம்: ஆதி.
22-வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

பல்லவி

எதிர்பத்தர் தந்துயரைப் பரிபத்தராம் நல்ல
எழில்பத்தர் தம்பெயர்காண் எறிபத்தராம் பாரில் (எ)

அநுபல்லவி

விதிர்விதிர்த் தேபுலம்பி வெருள்சிவ காமியாண்டார்
வேதனையார்ந்திடச்செய் வேழமதை யழித்தார் (எ)

சரணம்

ஈசனுக் கென்றடியார் ஏந்திச் செல்லுமலரை
நாசமுறச் செய்கரி நாசமுற மழுவால்
வீசியதம்மைப்புகழ் வேந்தனடைந்துமிகு
நேசமுடன் அணைய நின்றுபுகழே வென்றார் (எ)

9. ஏனாதிநாத நாயனார்

"ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"பத்தனை யேனாதிநாதனைப் பார்நீ டெயினை தன்னுள்
அத்தனைத் தன்னோ டமர்மலைந்தான் நெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
நித்தனை யீழக் குலதீபன் என்பர் இந் நீணிலத்தே"

—நம்பியாண்டார் நம்பி.

இராகம்: வஸந்தா. தாளம்: திஸ்ரஜாதி அடதாளம்.
17-வது சூரியகாந்தத்திற் பிறந்தது. (10 எண்கள்)

பல்லவி

மாணடும் செங்கரத்தன் தாணடுளங் கொண்ட
ஏனாதி நாதர் பெயர்காண் வானோர் புகழ் நாமம்
(மா)

அநுபல்லவி

கானடு வெம்புலி போல் கோனுகும் வீரர் அவர்
காதலுடன் நீற்றினைக் காலமெல்லாம் போற்றும்
(மா)

சரணம்

போரில் ஒண்ணாத அதி சூரன்புறம் மறைத்தே
பொருது வஞ்சத்தால் நீறு பூசுதன் நெற்றிதன்னை
நேரில் தம்முன் புகாட்ட நின்று திகைத்துத்தம்வாள்
நீட்டியவ் வஞ்சன் தம்மை வீட்டிடச் செய்து
வென்றார். (மா)

10. கண்ணப்ப நாயனூர்

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்"

—சுந்தரர்.

"நிலத்திற் றிகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்நடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன் மலர்க்கண் ணிடந்தப்பினுன்
குலத்திற் கிராதனங் கண்ணப்பனுமென்று கூறுவரே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: காமவர்த்தனி. தாளம்: ஆதி.
51-வது மேளராகம்,

பல்லவி

எண்ணப்படும் அடியார் தம்முள் இணையில் அன்பர்
கண்ணப்பர் என்று கண்டேன் காதல்கொண்டேன்
கனிந்தேன் (எ)

அநுபல்லவி

பண்ணப்படும்பூசையைப் பாதச்செருப்பால்எச்சில்
படிந்த நீரால் ஊனினுல் பரிந்து புரிந்தார் கண்டாய்
(எ)

சரணம்

நெற்றிக்கண்ணர்தமக்கோர்நீண்டகண்ணில்உதிரம்
நிறைந்து வழியத் தம்கண் நெகிழ்ந்தெடுத்தப்பி
மேலும்
பற்றித்தம் கையைஈசன் பரிந்து 'நில்' என்னப்
பாய்ந்து
மற்றைக் கண்ணையுந் தோண்டி வைக்கத் துணிந்த
வள்ளல் (எ)

11. குங்குலியக்கலய நாயனுர்

" கடவூரிற் கலயன் தன் அடியார்க்கும் அடியேன் "

—சுந்தரர்.

" ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி யெழிற்பனந்தாள்
சாய்ந்த சிவனிலேத் தானென்பர் காதலி தாலிகொடுத்(து)
ஆய்ந்தநற் குங்குலி யங்கொண் டனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே "

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தீரசங்கராபரணம். தாளம்: மிஸ்ரசாபு.
ஏழெண்நடை

பல்லவி

சங்கரனுக் கினிய தொண்டில் உயர் நிலேயர்
குங்குலியக் கலயர் எங்கள் ஐயர் மெய்யர் (ச)

அநுபல்லவி

எங்கள் சொல் வேந்தருக்கும் இனிய சம்பந்தருக்கும்
ஏற்ற வகை விருந்து போற்றி முன்னாள் அளித்தார் (ச)

சரணம்

அங்கயற் கண் மனைவி மங்கலத் தாலி விற்றும்
குங்குலியம் அரற்கே கொண்டு தொண்டாற்றி நாளும்
பங்கமில் வேந்தன்படைப் பலத்தால் நிமிர்த்த வொண்ணுப்
பனந்தாளினனைத் தாமுன் முனந்தாழ்ந் துயர்த்தி யோங்கும் (ச)

12. மானக்கஞ்சாற நாயனர்

"மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
அடியார்க்கும் அடியேன்".

—சுந்தரர்.

"கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்சவடிக்கிவை நல்கெனலும்
அலசு மெனக்கரு தாதவள் கூந்த லரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக் கஞ்சாற னெனும் வள்ளலே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: குந்தலவராளி.
20-வது ஹரிகாம்போதியிற்
பிறந்தது.

தாளம்: கண்டஜாதி
திரிபுடை.

பல்லவி

மானக்கஞ் சாறர் எனும் மாண்புடையார் தமை
வாழ்த்தும் அடியவரே வாழ்வுடையார்! (மா)

அநுபல்லவி

*தானக்கரம் உயர்ந்த தாளாண்மையார்; சிறந்த
வானக்கவின் மழைசெய் வான்கற்பினள் கணவர் (மா)

---

* தானக்கரம்—தருமஞ்செய்கின்ற கை

சரணம்

கூனற் பிறைச் சடையான் கூடிவிரும்பவே தம்
கோலத் திருமணச்சீர் கோதில் திருமகளார்
தேனக்க மாமலர் சேர் தேடற்கருங் கூந்தலைச்
சீலத்துடன் அரிந்தே சேவித்தவன் கையீந்த
(மா)

13. அரிவாட்டாய நாயனார்

"எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"வள்ளற் பிராற்கமு தேந்தி வருவோன் உகலும் இங்கே
வெள்ளச் சடையாய் அமுதுசெய் யாவிடில் என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட் டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: நாதநாமக்கிரியை.
15-வது மாயாமாளவகௌளையிற் பிறந்தது.

தாளம்: மிஸ்ரசாபு.
ஏழெண்நடை

பல்லவி

அரிவாளால் தம்மிடற்றை அரிவாராகும் அடியார்
அரிவாட்டாயர் பெயரை அறியாருண்டோ? (அ)

அநுபல்லவி

பரிவாற் செந்நெல் அமுதும் பைந்துணர் மாவடுவும்
பசுஞ் செங்கீரைக் கறியும் பரமர்க் கென்றும்
படைத்தே (அ)

சரணம்

மலைபோல் வளர்ந்துநிதம் அலைசெய்வறு மையிலும்
மறவாமல் அப்பணியால் உறவாடுங்கா லொருநாள்
தலைமேலுறும் செங்கீரை தாவில் அரிசிவடு
தடுமாறிச் சிந்திவீழக் கெடுமாறுணர்ந்து நாடி (அ)

14. ஆனாய நாயனார்

" அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கடியேன் "

—சுந்தரர்.

" தாயவன் யாவுக்குந் தாழ்சடை மேல்தனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை உவந்தாண் டருளினனே "

—நம்பியாண்டார் நம்பி.

இராகம்: கரஹரப்ரியா.
22-வது மேளம்

தாளம்: ஆதி.
இரண்டு களைச்சவுக்க காலம்
சமத்தில் எடுப்பு

பல்லவி

ஆனாயர் வேய்ங்குழலின் ஆராவமுத இசை
தானாகும் எம்முயிர்க்கோர் தனிவிருந்தே நனியருந்த
(ஆ)

அநுபல்லவி

தேனார் கொன்றைமலரின் சீரார்கோலந் தன்னையே
கோனும் சிவன் எனவே கொண்டு குழைந்தெடுத்த
(ஆ)

சரணம்

ஏழிசையால் இறையை ஏத்தும் அஞ்செழுத்தினை
ஏலும் வகையால் ஓதி இனிய சராசரத்தை
வாழிசையால் மயக்கி மன்றில் நடம்புரியும்
வள்ளலையும் இயக்கி வந்தருளச் செய்ததோர் (ஆ)

15. மூர்த்தி நாயனர்

"மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"அவந்திரி குண்டம ணவதின் மாள்வன்என் றன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துலகாண்டஒண் மூர்த்தி தன்னூர்
நிவந்தபொன் மாட மதுராபுரி என்னும் நீள்பதியே"

—தம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஆபோகி. தாளம்: கண்ட ஜாதி
22-வது கரஹரப்ரியாவிற் திரிபுடை.
பிறந்தது.

பல்லவி

நின்மலமாகும் வேணி நீறுகண்டிகை யாகும்
மும்மையால் ஆண்டமன்னர் மூர்த்தியாரே (நி)

அநுபல்லவி

தம்முழங்கையைப் பாறை தன்னிலே தேய்த்து
முன்னம்
சங்கரனர் பூசைக்கே சந்தனம் தந்தவர்காண் (நி)

சரணம்

பொய்யமண் ஆட்சிதீர்ந்து போயொரு வேழமது
ஐயர் தமை யெடுப்ப ஆலவாயான் அருளால்
வையமுறை செய்தென்றும் வாழிசைவம் தழையச்
செய்யும் எண்ணமுடனே செங்கோல்தனை
யோச்சினர் (நி)

16. முருக நாயனார்

"முருகனுக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்
மதியஞ் சடையாற் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழற்சண்பைநாதற்குத்தோழன் வன்றொண்டனம்பொன்
அதிகம் பெறும் புகலூர் முருகன்எனும் அந்தணனே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பூர்ணசந்திரிகா.
28-வது ஹரிகாம்போதியிற்
பிறந்தது.

தாளம்: திஸ்ரஜாதி
ரூபகம்.

பல்லவி

ஓங்கும் மனத்தாற்சிவன் தாங்கும்நாமம்உரைத்தே
உருகும் அன்பர் புகலூர் முருகர் என்பீர் உலகீர்
(ஓ)

அநுபல்லவி

பாங்கின் ஆராவமுதம் பாலித்திடுக பாலிப்
பரனுர்க் கிசைந்தமலர் பரிவாலெடுத்துதவி (ஓ)

சரணம்

முன்செய்தவத்தாலீசன் மொய்மலர்த்தாளிணைக்கே
மூண்ட அன்பால் தொண்டினைப் பூண்ட
பெரும்புகழார்
பொன்செய்த மேனியினர் பூம்புகலி வள்ளலின்
பொங்குமணம் புகுந்தே சங்கரன் தாளடைந்தார்
(ஓ)

17. உருத்திரபசுபதி நாயனார்

"உருத்திரபசுபதிக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"அந்தாழ் புனல்தன்னில் அல்லும் பகலும்நின் றாதரத்தால்
உந்தாத அன்பொ டுருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்திர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பர்இந் நானிலத்தே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: குறிஞ்சி. தாளம்: கண்டஜாதி
29-வது தீரசங்கராபரணத்திற் ஏகதாளம்.
பிறந்தது.

பல்லவி

நீடுருத்திரம் நித்தம் ஓதியே
நின்றபசுபதி என்றல் நீதியே (நீ)

அநுபல்லவி

கூடு மாமறை கூட்டிடும்பயன்
கூறவே இதன் மேலிலாததால் (நீ)

சரணம்

தெள்ளு தண்புனல் உள்கழுத்துறச்
சென்றி ராப்பகல் நின்றதில்நிதம்
உள்ளும் அன்புற உச்சிமேற்கரம்
ஒன்றி நாடியே ஓய்விலாமலே (நீ)

18. திருநாளைப்போவார் நாயனர்

"செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்"
—சுந்தரர்.

"நாவார் புகழ்த்தில்லை அம்பலத் தான்அருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்
மூவா யிரவர் கைகூப்ப முனியாயவன் பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர் என்பர் இம்மண்டலத்தே"
—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: **பைரவி.** தாளம்: **மிஸ்ரசாபு**
20-வது மேளம் நடபைரவியில் எழெண்நடை
ஆரோகணத்தில் மட்டும் சதுஸ்ருதி
தைவதம் உடையது.

பல்லவி

திருநாளைப்போவார்தம் திருநாமமே சொல்லின்
ஒருநாளைக்காகிலும் வரும் சேமமே! (தி)

அநுபல்லவி

வருநாளெல்லாம் அன்பு வளர்நாளாகமுன்பு
மருவார்கோரோசனைதோல் தருவார்சிவன்
பணிக்கே (தி)

சரணம்

புன்கூர்தனில் இறைவன்
முன்சேர் நந்திவிலக
மின்சேர் சடையரனை
மேவிப் பணிந்து பின்னர்
பொன்சேர் தில்லைப்பதியில்
புகுந்தே தீயில் முனியாய்ப்
பின்சீர் அம்பலக்கூத்தன்
தன்சோதியிற் கலந்த
(தி)

19. திருக்குறிப்புத்தொண்ட நாயனர்

"திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"மண்டும் புனற்சடை யான்தமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடாதொழியின் யான் வீவன்என்னு
முண்டம் படர்பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி ஏகாலியர்தங்கள் தொல்குலமே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மேசகல்யாணி. தாளம்: ஆதி
65-வது மேளம் இரண்டுகளைச்சவுக்ககாலம்
அரையிட்எடுப்பு

பல்லவி

காஞ்சிநகரின் திருக் குறிப்புத் தொண்டர் என்றும்
வாஞ்சைமிகும் ஏகாலி வள்ளல் கண்டீர் உலகீர்
(கா)

அநுபல்லவி

தாஞ்செயுந் தொண்டெனவே
சங்கரனர் அடியார்
தங்கந்தையின் அழுக்கைத்
தங்கையினல் அகற்றும் (கா)

சரணம்

அடைந்த தொண்டர் ஒருவர்
ஆடைதனை யொலித்தே
அந்திப்பொழுதுள்ளாய ஆகாமையால் மழையால்
உடைந்த மனத்துடனே
உடைத்திடத் தந்தலையை
ஓங்கிப் பாறையில் எற்றத்
தாங்கிச் சிவன்கை தேக்கும் (கா)

20. சண்டேச நாயனர்

"மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினலெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்"

—சுந்தரர்.

"குலமே றியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் சண்டிகண் டீர்தந்தை தாள்இரண்டும்
வலமே றியமழு வால்எறிந் தீசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: நீலாம்பரி. தாளம்: ஆதி
29-வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது இரண்டுகளைச் சவுக்கம் அரையிடஎடுப்பு

பல்லவி

பண்டீசனைப் பணிந்த[1] தொண்டர்களுக்குளே நம்
சண்டேசனுக்கிணையுண்டோ? சாற்றுவீர் நீரே (ப)

அநுபல்லவி

தொண்டீசனுக்கியற்றல்[2] தூயகலைகள்எல்லாம்
துணியும்பொருட்கெல்லையாம் தொன்மை
யுண்மையறிந்து (ப)

---

1 பண்டு ஈசனைப் பணிந்த 2 ஈசனுக்குத் தொண்டு இயற்றல்

சரணங்கள்

1.

கொண்டீசன் தன் உருவைக்[3] கோலமணலிற்செய்து
கோக்கள் சுரந்தபாலைத் தேக்கியதனிற்பெய்து
கண்டீசனின் உணர்வில்[4] காதல்நிறைந்துபொங்கக்
காலால்தன்னையுதைத்துக் கருதாத் தந்தையுண
ரான் (ப)

2.

மேலாம் திருமஞ்சனப் பாலார் திருக்குடத்தைக்
காலால் இடறிச்சிந்தும் மாலார்தந்தையின்தாளைக்
கோலாம் மழுவால்வீசிக் கோனும்தந்தைசிவனார்
பாலார்மலர்ஆடைகொள் பண்பார்பதங்
கொண்டவன் (ப)

3 ஈசனது உருவைக்கொண்டு

4 ஈசனைக்கண்டு அவ்வுணர்வில்

21. திருநாவுக்கரசு நாயனர்

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்"
—சுந்தரர்.

"நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்ருள்
உற்றவன் உற்ற விடமடை யாரிட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக் கரசெனும் தூமணியே".

"மணியினை மாமறைக்காட்டு மருந்தினை வண்மொழியாற்
றிணியன நீள்கதவம் திறப்பித்தன தெண்கடலிற்
பிணியன கன்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக்கரையர் பிரான்தன் அருந்தமிழே".
—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஹரிகாம்போதி. தாளம்: ஆதி.
28-வது மேளம்

பல்லவி

அஞ்செழுத் தோதினர் ஆழ்கடல் நீந்தினர்
அப்பர் என்றிடு நாவுக் கரசர் கண்டாய் (அ)

அநுபல்லவி

தஞ்சமென்றே சிவனர் தாள்கள் தமைப் பரவி
நெஞ்ச மதில் நினைந்தே நெகிழ்ந்து தமிழ்
புனைந்தே (அ)

சரணம்

வஞ்சமண் ஆலந்தன்னை வாங்கியுண்டேயும்
சென்றார்
வைத்தவெந் நீற்றறையை வாழ்தல மாக்கினின்றார்
"அஞ்சல் இலோம்" என்றுமோர் ஆனைதனையே
வென்றார்
ஆசைஅப் பூதிதன் சேய் ஆருயிர் மீள்க என்றார்!
(அ)

22. குலச்சிறை நாயனார்

"பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"அருந்தமி ழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித் தோன்எழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன்னதிகாரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஸ்ரீரஞ்சனி. தாளம்: ஆதி.
22-வது கரஹரப்ரியாவிற் பிறந்தது

பல்லவி

நலச்சிறப்பின் தென்னன் நாட்டமைச்சர் - தூய
குலச்சிறப்பே மிகும் குலச்சிறையார் (ந)

அநுபல்லவி

கலைச் சிறப்பின் சுந்தரர் காதலுடன் முன்
தம்மைக்
கவின்பெரு நம்பி என்றே நவின்றிடப்
பெற்றவராம் (ந)

சரணம்

எக்குலத் தினரேனும் எம்பிரானுக்
கன்பரென்றால்
மிக்கவர் பாதம் வீழ்வார்; மேவி மங்கைக் கரசி
பக்க பலமாய்ச் சைவம் பரவவுதவி, வேந்தைப்
பாது காத்துச் சமணர் தீதகற்றிய தீரர் (ந)

23. பெருமிழலைக்குறும்ப நாயனார்

"பெருமிழலைக் குறும்பர்க்கும்...அடியேன்"

—சுந்தரர்.

"சிறைநன் புனல்திரு நாவலூ ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழல்நாளை எய்தும் இவனருள் போற்ற இன்றே
பிறைநன் முடியன் அடியடை வேன்என் றுடல் பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்பன் எனும் நம்பியே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சக்ரவாகம் தாளம்: ஆதி
16-வது மேளம் இரண்டுகளைக்சவுக்கம்
அரையிட எடுப்பு

பல்லவி

மழலைக்குறுநகை வாய்ப் பரவைக் கொழுநனைமுன்
மிழலைக் குறும்பர் கொண்டார் மிகு குருவாய் (ம)

அநுபல்லவி

அழலைப் புரையும் மேனி அரனைப் பணி
தொண்டர்க்கே
அருநிதி யோடமுதும் அகமகிழ்ந்தே உதவி (ம)

சரணம்

நாளும் நம்பியாரூரர் நாமம் நவில் நலத்தால்
ஆளும் படி யணிமா வாதி சித்தி யடைந்தும்
மூளும் அன்பாலே யோக முறையாற் கைலை
தன்னைக்
கேளாம் சுந்தரர் சென்ற கிழமை தனிற்
சேர்ந்திட்டார் (ம)

24. காரைக்காலம்மையார் (பேயார்)

'பேயார்க்கும் அடியேன்''

—சுந்தரர்.

''நம்பன் திருமலை நான் மிதியேன் என்று தாளிரண்டும்
உம்பர் மிசைத் தலையால் நடந்தேற உமைநகலுஞ்
செம்பொன்னுருவன் 'என் அம்மை' எனப்பெற்றவள் செழுந்தேன்
கொம்பினுகு காரைக் காலினில் மேய குலதனமே''

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: கேதாரகௌளை தாளம்: மிஸ்ரசாபு
28-வது ஹரிகாம்போதியிற் பிறந்தது எழெண்நடை

பல்லவி

புனிதவதி காரைக்கால் அம்மையென்போம் - அவர்
புகழ்தனைப் பாடுதலே செம்மை யென்போம் (பு)

அநுபல்லவி

மனித நிதி என்பது மாதவத் தொண்டர் தமை
இனிதமுது செய்வித்தல் என்று நன்றே தெளிந்த
(பு)

சரணங்கள்.

1

கனிதனை யடியவர் கடும்பசிக் குதவினர்
கடவுள் அருளாலந்தக் கனியிருமுறைகொண்டார்
'வனிதை யன்றே இவள்யான் வணங்கும்
அணங்கே' என்று
மருளும் கணவன்பணி அருளுடைய நன்மணி
(பு)

2

மணம்பயில் கொழுநன்தன் மனம்திரி நிலைகண்டு
பிணம்பயில் சுடலையின் பேயின் வடிவேகொண்டு
பணம்பயில் அரவணி பரமன் கயிலைசென்று
குணம்பயில் ஆலங்காட்டில் கூத்தன் நடனம்
காணும் (4)

25. அப்பூதியடிகள் நாயனர்

"ஒருநம்பி யப்பூதி அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

" தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்ன
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல்திங்களூரினில் வேதியன் அப்பூதியே ".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பைரவி

தாளம்: ஆதி
இரண்டுகளைச் சவுக்ககாலம்
அரையிட எடுப்பு

பல்லவி

அந்தணரின் மேம்பட்ட அப்பூதியாகும் ஒரு
செந்தண்மையார் சிறப்பே செப்பரிதாம் (அ)

அநுபல்லவி

கொந்தணவும் பொழில்கள் கூடும் பழனக்கோமான்
குஞ்சிதபாதமேதம் குஞ்சிப்பூவாமெனக்கொள்
(அ)

சரணம்

வீடுகுளம் காவுடன் மாடுமக்கள் யாவும் சொல்
வேந்தரின் நாமமுடன் மேவுவண்ணம் செய்து பின்
கூடும் அவ்வன்பர் உண்ண வீடியதம்பிள்ளைமெய்
மூடுதல் செய்தவர்வாய் பாடுதலும் படைத்த (அ)

26. திருநீலநக்க நாயனர்

"ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கடியேன்"

—சுந்தரர்.

"பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலும் அஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை நீப்பவுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காண்என்று பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக்கன்னெனும் வேதியனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சுத்தசாவேரி
22வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: ஆதி
இரண்டுகளைச் சவுக்ககாலம்
அரையிட எடுப்பு

பல்லவி

நீலநக்கர் எனும்பேர்க் கோலமிக்க அந்தணர்
நீணிலத்திற் சிறந்த நேசர் கண்டாய் (நீ)

அநுபல்லவி

ஞாலமிக்க சிவன்மேல் நழுவிவிழச்சிலம்பி
நாடிவாயால் அதன்மேல் ஊதிய நங்கை கேள்வர்
(நீ)

சரணம்

தேங்கும் எழிற் காழியின் செங்கனகச் சேய்தனைச்
சேர்ந்த அடியாருடன் செய்வித்தமுது தங்கள்
பாங்குமனை வேதியின் பாங்கர் உறங்க இடம்
பாணருக்கும் ஏழிசைப் பாணியாருக்குந் தந்த (நீ)

27. நமிநந்தியடிகள் நாயனார்

" அருநம்பி நமிநந்தி யடியார்க்கும் அடியேன் "

—சுந்தரர்.

" வேதமறிக் கரத்தாரூர் அரற்கு விளக்கு நெய்யைத்
தீதுசெறியமண் கையரட் டாவிடத் தெண்புனலால்
ஏதமுறுக அருகரென் றன்று விளக்கெரித்தான்
நாதன் எழிலேமப்பேறூர் அதிபன் நமிநந்தியே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தன்யாஸி தாளம்: திஸ்ர ஏகம்
8வது அனுமத்தோடியிற்பிறந்தது.

பல்லவி

ஏமப்பேறூரில் வந்த எழில் மறையோர் புகழ்
நாமப்பேறுடையவர்நம் நமிநந்திகாண் (ஏ)

அநுபல்லவி

நேமப்படிக் கோயிலில் நீரால் விளக்கெரித்த
நேசப்பண்பினேடமண் ஏசுச்சொல்லைத்
துடைத்தார் (ஏ)

சரணம்

எங்கள் பெருமான் ஆரூர் ஈசன் எழுந்தருளும்
எழிற்பங்குனி விழாவில் எல்லாக் குலத்தினேரும்
அங்குற்றதால் இழிவு அடைந்தேமென்றே பின்
அரன்
அருளால் ஆரூரின் மக்கள் ஆவார்கணம்என்றுணர்
(ஏ)

28. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

" வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற்பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் ".

—சுந்தரர்.

" வையம் மகிழ யாம்வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரமபுரத்தாற் கம்மென் குதலைச்செவ்வாய்
பையமிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள் பெற்றனன்என்பர் ஞானசம் பந்தனையே ".

" பந்தார்விறலியர் வேள்செங்கட் சோழன் முருகன்நல்ல
சந்தாரகலத்து நீலநக்கன்பெயர் தான் மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்திலிட்டு அடியேன்கொடுத்த
அந்தாதி கொண்டபிரான் அருட்காழியர் கொற்றவனே ".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: இந்தோளம் தாளம்: ஆதி
8வது அனுமத்தோடியிற் பிறந்தது

பல்லவி

ஊனசம்பந்தத் துலகில் உய்வழிதாராய்
ஞானசம்பந்தா நானுறும் நைவழிதீராய்! (ஊ)

அநுபல்லவி

கானசம்பந்தத்தமிழ்க் காழிச்சம்பந்தாஉயர்
வானசம்பந்தம்கொள்வேன் வாழ்த்தியுன்
நாமந் தன்னை (ஊ)

சரணம்

மீனவன் நைந்து துயர் மேவிடச் செய்தகலி
வென்றும் திருநீற்றொளி என்றும்நிலவச்
செய்தோய்!
கோனவன் கொண்டதவக் கோதைமங்கைக்கரசி
குழந்தையெனக் குழைந்தே கூப்பிக்கை
தொழுந்தேவே! (ஊ)

29. ஏயர்கோன் கலிக்காம நாயனுர்

" ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன் "

—சுந்தரர்.

" கொற்றத் திறல்எந்தை தந்தைதந்தந்தையெங் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி யேம்திகழ் வன்றெண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பான்என் றுடைவாள் உருவியங்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடிஏயர் சீர்க்குடியே.

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தேவகாந்தாரி
29வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது

தாளம்: மிஸ்ரஏகம்
ஏழெண் நடை

பல்லவி

ஏயர்கோன் கலிக்காமர் என்பவர்க்கிணையாமோர்
நேயரும் ஏதிலரும் நேர்ந்ததுண்டோ? உலகில் (ஏ)

அநுபல்லவி

தூயசிவன் தன்னையே துணிந்து பரவையின்பால்
தூதாகமுன்செலுத்தும் சுந்தரரைச் சினந்த (ஏ)

சரணம்

'இறையவன் அருள் சூலை இதனையாரூரன் தீர்க்கும்
இழிவினிற்சாதல்மேலாம்' என்றிறந்தார்; பின்வந்த
மறைபயில் ஆரூரர்தாம் மாளஓங்கிடும்வாளை
மற்றுயிர்பெற்றேதம்கைப் பற்றியவர் நட்பானுர்
(ஏ)

30. திருமூல நாயனர்

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

" குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னுகின்ற அங்கணனே."

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மத்யமாவதி
22-வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: திஸ்ரஜாதி
அடதாளம்
பத்து எண்கள்

பல்லவி

திருமூலர் திருநாமம் சிந்தைசெய்வார்—தம்
கருமூலப் பிறவியை நிந்தைசெய்வார்! (தி)

அநுபல்லவி

ஒருகோலக் கயிலையில் வரும்யோகி
உயிர்வாழும் நிரைகாக்க உடல்மாறும் (தி)

சரணம்

ஆவடு தண்துறை யாம்பதிமேவி
ஆகமங்கள் சாரம் ஆம்உயர்நூலை
மூவாயிரம் இனிய பாவினுல்தூய
மூலத்தமிழ் தன்னில் சீலத்தினிற்செய் (தி)

31. தண்டியடிகள் நாயனர்

"நாட்டமிகு தண்டிக்கும்...அடியேன்"

—சுந்தரர்.

"கண்ணார் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தாற்குத்
தண்ணார் புனல்தடந் தொட்டலுந் தன்னை நகும்அமணர்
கண்ணாங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறல்தண்டியே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மணிரங்கு
22-வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: சதுரஸ்ரஏகம்

பல்லவி

தண்டியடிகள் புகழ் தண்டமிழ் மொழிநிகழ்
எண்டிசையும் நிலவும் என்றிசைப்பீரே! (த)

அநுபல்லவி

பண்டிறைவன் ஆரூர் கொண்டுறையும் நாதன்
பாதமல்லால் வேறோர் பண்டமதைக் காணர் (த)

சரணம்

வெட்டமுயன்ற குளம் வெற்றமணர் தடுத்தே
"கெட்டகண் நீபெறில்யாம் விட்டகல்வோம்
இங்"கென
ஒட்டவும் தம்விழிகள் விட்டொளி வீசவும்பின்
நட்ட வேந்தாலமணத் துட்டர்களையொழித்த (த)

32. மூர்க்க நாயனார்

"மூர்க்கர்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

" தண்டலை சூழ்திரு வேற்காட்டூர் மன்னன் தகுகவற்றூற்
கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன் கொண்ட [பொருள்
முண்டநன் னீற்றன் அடியவர்க் கீபவன் மூர்க்கனென்பர்
நண்டலை நீரொண் குடந்தையின் மேவுநற் சூதனையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: அடாணா தாளம்: ஆதி
29-வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது

பல்லவி

மூர்க்கர் எனுந்தொண்டர் முதல்வன் திருநீற்றின்
பாற்பரிவே மிகும் பண்புடையார் (மூ)

அநுபல்லவி

நீர்க்குமிழி போன்ற நீடு செல்வமுழுதும்
நீங்கிய போதும்தம் பாங்கின் தொண்டேசெய்யும் (மூ)

சரணம்

உருளாயச் சூதாடி உயர்குடந்தை நாடி
உறுவார்களையும் வென்றே பெருவாரியாய் வந்த
பொருளாயம் அதுகொண்டு புகலரும் அமுதாக்கிப்
புனித அடியவர்க்கெப் பொழுதும் உதவிவாழ்ந்த (மூ)

33. சோமாசிமாற நாயனர்

"அம்பரன் சோமாசி மாறனுக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"சூதப் பொழில்அம்பர் அந்தணன் சோமாசி மாறன்என்பான்
வேதப் பொருள்அஞ் செழுத்தும் விளம்பி யல்லான்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னும்
மாதுக்குக் காந்தன் வன்தொண்டன் தனக்கு மகிழ்துணையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: எதுகுலகாம்போதி
28-வது ஹரிகாம்போதியிற்
பிறந்தது

தாளம்: மிஸ்ரசாபு
எழெண்நடை

பல்லவி

தாமாமறை பயின்று நேமமாயாகம் செயும்
சோமாசி மாறர்பெயர் நாம் பேசுவோமே (தா)

அநுபல்லவி

ஆமாகில் ஈசனுக்கோர் அன்பரெவரும் எம்மைத்
தாமாள வல்லார்என்றே நாமஅஞ் செழுத்தோதித்
(தா)

சரணம்

வாசமலர்க் குழலின் நேசமங்கை பரவை
பூசனைசெய் சுந்தரர் பொற்கழலே புணையாய்ப்
பாசமுறும் நட்புடன் பன்னாளுடனிருந்தும்
ஈசன் அடிமலரில் என்றும் இன்பம் திளைப்போர்
(தா)

34. சாக்கிய நாயனர்

"வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்".

—சுந்தரர்.

"தகடன ஆடையன் சாக்கியன் மாக்கல் தடவரையின்
மகள்தனந் தாக்கக் குழைந்ததிண் தோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு மேனியிற் செங்கல் எறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவ ஞர்சங்க மங்கை புவனியிலே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பிலஹரி — தாளம்: திஸ்ரஏகம்
29-வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது

பல்லவி

சாக்கியனர் பூசையின் தன்மையெல்லாம் நனி
நோக்கிய பேர்களுக்காம் நன்மையெல்லாம் (சா)

அநுபல்லவி

தூக்கிய கல்லெறிந்தே தோன்றிய லிங்கமிசைத்
தூண்டிய காதலாலே ஆண்டவனைப் பணிந்த
(சா)

சரணம்

ஆக்கிய முன்தவத்தால் ஆசையப் பூசைதனை
அன்ருடமே செய்திட ஆங்கொருநாள் மறந்து
நீக்கியப்பூசை உண்ணும் நேரம் நினைந்தேயோடி
நேசமுடன் கல்லினை வீசாசன் அருள்செய் (சா)

35. சிறப்புலி நாயனார்

"சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்".

—சுந்தரர்.

"புவனியிற் பூதியுஞ் சாதனமும் பொலி வார்ந்துவந்த
தவநிய மர்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனும்
அவனியிற் கீர்த்தித்தென் ஆக்கூர் அதிபன் அருமறையோன்
சிவன்நிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சாருகேசி. தாளம்: ஆதி.
26-வது மேளராகம்

பல்லவி

திருவாக்கூரிற் பிறந்த சிறப்புலியார்—எங்கள்
சிவனார் தொண்டிற் சிறந்த திறப்புலியார் (திரு)

அநுபல்லவி

தருவார்* திருக்கரத்தால் தருவார் அடியவர்க்கே
தாளாண்மை செய்யும்உயர் வேளாண்மையார்
மிகுந்த (திரு)

சரணம்

உருவார் மறையின்வேள்வி உணர்வாற் புரிந்
திறைவன்
ஒருநாம அஞ்செழுத்தை உரைநாவினர், உவந்து
வருவார வேடத்தோரை வரவேற்றமுதளித்து
வளமார் பொருள்தனையும் உளமாரவே உதவும்
(திரு)

---

* கற்பகத்தருவைப் போன்ற

36. சிறுத்தொண்ட நாயனார்

"செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்க்கடியேன்"

—சுந்தரர்.

"புலியின் அதளுடைப் புண்ணியற் கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல்துணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச் சிறுத்தொண்டன் கண்டீர்
மலியும் பொழிலொண் செங்காட்டங் குடியவர் மன்னவனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: இந்தோளம் தாளம்: ஆதி
20-வது நடபைரவியிற்
பிறந்தது

பல்லவி

சிறுத்தொண்டரின் சிறந்த சேவடிகள் என்றன்
சிரத்துண்டென மகிழ்ந்து செருக்குண்டனன்
நானே (சிறு)

அநுபல்லவி

மறுத்துண்டு வாழ்ந்தறியா மாண்புமிகும் வள்ளலார்
மனைக்குரிய வெண்காட்டு மங்கைதனை மணந்த
(சிறு)

சரணம்

ஆறுதிங்கட் கோர்முறை ஆகும் பசுவையுண்பார்
ஆசைப்படி தாம்பெற்ற நேசச்சீராளச் சேயை
கூறுசெய்தும் அமுது கூடியமைக்கும் போது
கூவி இல்லாளுந் தாமும் ஆவியுடன்சேய் கொண்
டார். (சிறு)

37. சேரமான்பெருமாள் நாயனர்
(கழறிற்றறிவார்)

"கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"மன்னர் பிரான்எதிர் வண்ணான் உடல்உவர் ஊறிநீறூர்
தன்னர் பிரான்தமர் போல வருதலுந் தான்வணங்க
என்னர் பிரான் "அடிவண்ணான்" என "அடிச்சேரன்" என்னுந்
தென்னர் பிரான்கழ றிற்றறி வான்எனுஞ் சேரலனே".

"சேரற்குத் தென்னுவலர் பெருமாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன் பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனைவெற்றிகொண்ட
சூரற்கெனதுள்ள நன்றுசெய்தாயின்றுதொண்டுபட்டே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: நாகசுராவளி   தாளம்: ஆதி
28-வது ஹரிகாம்போதியிற் பிறந்தது.

பல்லவி

கழறிற் றறிவாராம் சேரலரே—அவர்
கழலைப் பணியார்சீர் சேரலரே! (க)

அநுபல்லவி

அழலைப் புரைமேனி அம்பலக் கூத்தன்தாள்
ஆசைச் சிலம்பார்க்கும் ஓசைச்சுகம் கேட்கும் (க)

சரணம்

வண்ணார்தமை வணங்கி வாழ்பாணர்க்கே வழங்கி
வள்ளல் ஐயாறரைநீர் வழிவிடச்சென்றிறைஞ்சி
எண்ணாத செல்வமெல்லாம் ஈந்தாரூ ரருக்கந்த
ஏந்தலுடன் கயிலை போந்துலாவினைப்பாடும் (க)

38. கணநாத நாயனார்

"கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"தொண்டரை யாக்கி யவரவர்க் கேற்ற தொழில்கள் செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல் கொண்டேறிய மின்னுக்குக் கோலமடல்கள்தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடற் காழிக் கணநாதனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சாமா — தாளம்: மிஸ்ரசாபு
28-வது ஹரிகாம்போதியிற் பிறந்தது. — ஏழெண்நடை.

பல்லவி

வாழிதிருத் தொண்டர்க்கு வழிகாட்டும் வள்ளலாகிக்
காழியில் வந்துதித்தார் கணநாதரே (வா)

அநுபல்லவி

ஊழியினும் மிதக்கும் உயர்தோணியப்பருக்கும்
உமைதிருப்பாலுண்சேய்க்கும் அமையும்பூசனை
செய்தே (வா)

சரணம்

தூயகைத் திருத்தொண்டாம் தூமலர்த் தொடை
செய்தல்
தூகிமெழுகல் ஆதித் தொன்மைச்சரியைத்
தொண்டின்
மேயவிளக்கம் செய்தே வெகு தொண்டரைப்
பயிற்றி
மின்கயிலைக் கணத்தின் மேலாம் நாதராய்
மிக்கார் (வா)

39. கூற்றுவ நாயனர்

"ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோனடியேன்"

—சுந்தரர்.

"நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்து நல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலமெல் லாம்ஒரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள ஞகிய கூற்றுவனே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: நாயகி
22-வது காஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: ஆதி

பல்லவி

மாற்றலரும் ஏனைய மன்னர்களும் அழியக்
கூற்றுவர் வையமெல்லாம் ஆண்டிடக்
கொண்டனரே (மா)

அநுபல்லவி

சாற்றரிய செல்வமும் சங்கரன் நாமந்தன்னைச்
சாற்றவருஞ் செல்வமும் சாலவும் தாமடைந்தே
(மா)

சரணம்

திகழ்வேந்தர் அணிமுடி தில்லைவாழந்தணர்தம்
திருக்கரத்தாலேசூட்ட மறுக்கத்துணிந்ததாலே
புகழ்ஈசன்பாதமேதம் பொன்முடியாகச்சூடிப்
புவனிமிசைக் கோயில்கள் புரந்து சிறந்தவள்ளல்
(மா)

40. பொய்யடிமை யில்லாத புலவர்

"பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"தரணியிற் பொய்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயுந் திருவாலவாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பலஹம்ஸ
28-வது ஹரிகாம்போதியிற்
பிறந்தது

தாளம்: ஆதி

பல்லவி

மையணியும் கண்டனர் மலரடிக்கே யாளானர்
பொய்யடிமை யில்லாத புலவரென்பார் உலகோர்
(மை)

அநுபல்லவி

செய்யுளின் சொல்தெளிவும் செவ்வியநூலின்
நோக்கும்
மெய்யுணர்வின்பயனும் வேணியன்பாதம்என்றே
(மை)

சரணம்

சொற்பதங்கள் பிணைந்தே தூயகவிபுனைந்தே
தோத்தரிக்கப் பெறுவோர் சோமசுந்தரர்அல்லால்
அற்பர்களாகும் மாந்தர் அல்லர் எனத்துணிந்தே
அல்லும் பகலும் ஈசன் அளவில் புகழ்பாடியே
(மை)

சரபோசி சரசுவதி மகால்

41. புகழ்ச்சோழ நாயனார்

"பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்"

—சுந்தரர்.

"புலமன் னியமன்னைச் சிங்களநாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழன தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக் கீந்ததொர் வண்புகழே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: காம்போதி
28-ஹரிகாம்போதியிற்
பிறந்தது

தாளம்: கண்டஜாதிதிரிபுடை
இரண்டுகளைச் சவுக்ககாலம்
முக்கால்இட எடுப்பு

பல்லவி

கருவைப் பதியாலாண்ட கவின்புகழ்ச்சோழனர்
திருவைப் புகழ்வதல்லால் திருவேறுண்டோ?
சொல்வாய் (க)

அநுபல்லவி

மருவைத்த மலர்சிந்தும் மதம்வைத்த கரிகொன்று
மறம்வைத்த எறிபத்தர் மனம்வைத்து மகிழ்ந்
திடும் (க)

சரணம்

மின்சடைவித்தகனர் மீதும்அவர்தம்தொண்டர்
மேலும் பதித்தஅன்பெக் காலும்மீதூறும்தூயர்;
புன்சடைத் தொண்டர்தாம்செய் போரிற்
கொல்லப்பட்டதால்
தம்முடியை நீக்கித்தீ
தன்னிற் பாய்ந்த மன்னராம் (க)

42. நரசிங்கமுனையரைய நாயனர்

"மெய்யடியா னரசிங்க முனையரையர்க்கடியேன்"

—சுந்தரர்.

"புகழும் படிஎம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண் டவனுக் கிரட்டிபொன் னிட்டவன்சீர்
திகழும் முடிநார சிங்க முனையர சன்திறமே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: நவரோஸ் தாளம்: ஆதி
29வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது

பல்லவி

சிறந்ததிருநீற்றினைச் சீலமில்லாரெனினும்
நிறந்த வகையணிவோர் நின்மலராவரே! (சி)

அநுபல்லவி

மறந்தனைச் செய்துசீலம் மறந்துலகில் வாழினும்
மனந்தழைத்து நீற்றினைப் புனைந்தவரும் தூயரே!
(சி)

சரணம்

ஆதிரை தோறும் ஓர்பொன் அடியவர்க்கீந்து
வந்த
அருநரசிங்கமுனை யரையரெனும் மன்னரால்
தீதுறு காமக்குறி மீதுறினும் நீற்றினைச்
சேர்ந்தணிந்தார் ஒருவர் சேர்த்திரு பொன்
ஏற்றனர் (சி)

43. அதிபத்த நாயனுர்

“ விரிதிரை சூழ் கடல் நாகை அதிபத்தர்க்கடியேன் ”
—சுந்தரர்.

“திறம்அமர் மீன்படுக்கும்பொழு தாங்கொரு மீன்சிவற்கென்(று)
உறவமர் மாகடற் கேவிடு வோன் ஒருநாட்கனக
நிறம்அமர் மீன்பட நின்மலற் கென்றுவிட் டோன்கமலம்
புறம்அமர் நாகை அதிபத்த னுகிய பொய்யிலியே”.
—நம்பியாண்டார் நம்பி.

இராகம்: கேதாரம் தாளம்: ஆதி
29வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது

பல்லவி

திருநாகையிற் பிறந்த சிவபத்தராம் அவர்
திருநாமந்தான் சிறந்த அதிபத்தராம் உயர் (தி)

அநுபல்லவி

ஒருநாளைக் கொருமீனை உயர்ஈசன் தனக்
கென்றே
உளமாரக்கடல் நீரில் உடனே விட்டொழுகும் நல்
(தி)

சரணம்

வருநாட்கள் பலவாக வரும் ஏகமீனையும்
வருந்தாமல் வீசித்தன் வளம்குன்றியும் ஓர்நாள்
உருவார்ந்த பொன்மீனுய் ஒன்றேவந்துற அஃதும்
உயர்நாதற்கென வீசி உயர்பாதம் தனைக்கூடும்
(தி)

44. கலிக்கம்பநாயனார்

"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பர்க்கடியேன்"

—சுந்தரர்.

"பொய்யைக் கடிந்து நம் புண்ணியர்க் காட்பட்டுத் தன்னடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தான்அவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணாகடத்துக் கலிக்கம்பனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தன்யாசி
8வது அனுத்தோடியிற்
பிறந்தது

தாளம்: மிஸ்ரசாபு
ஏழெண்நடை

பல்லவி

மெய்யாம் உளத்தடியார் மேலாம் வேடத்தைக்
கண்டு
கையால் தொழுவார் எங்கள் கலிக்கம்பரே (மெ)

அநுபல்லவி

நெய்யால் தயிரால் பாலால் நிறைந்த தேனல்
அமுது
செய்தே யடியார் உண்ணச் செய்தே
பணிந்திடுவார் (மெ)

சரணம்

அடியார் உண்ணும்முன் ஓர் நாள் அவர்தாள்
விளக்கும்போது
ஆளாய்த்தங்கண் முன்பிருந் தகலா நின்று
ரவரைப்
பொடியார் நீற்றுடன் கண்ட போது நீர் வார்க்கத்
தாழ்த்த
தொடியாள் மனைவிகையை நொடியில் தடிந்
திட்டாரே (மெ)

N.&.Co. MADRAS

45. கலியநாயனர்

"கலியன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலனுய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக் குழன்றுங்கொள் கூலியினல்
நம்பர்க் கெரித்த கலி யொற்றி மாநகர்ச் சக்கிரியே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சூர்யகாந்தம் தாளம்: கண்டஜாதி
17-வது மேளம் திரிபுடை

பல்லவி

தயிலவினை பயிலும் கலியரென்பார் அவர்
செயலின் இயலறிவார் மயலரிவார் தெளிவார்
(த)

அநுபல்லவி

குயிலனையாள் கொழுநர் கூடும்ஒற்றியூர்க் கோயில்
வெயிலென வீசவொளி விளக்கெரித்தே எப்
போதும் (த)

சரணம்

அளப்பரும் செல்வமெல்லாம் அழிந்து கைக்கூலி
யேற்றும்,
அரியமனைவி விற்க அரிதில் முயன்றும், கோயில்
விளக்கினுக் கெண்ணைகொள்ள வேறுவழி
யின்றித்தம்
மிடற்றை யரியும்போது மேவிஈசன் தடுத்தார் (த)

46. சத்திநாயனார்

"கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"கிரிவில் லவர்தம் அடியரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரையங் நாவரி வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகமழுர் தென் வரிஞ்சைத் திகழ்சத்தியே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மத்யமாவதி
22-வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: கண்டசாபு
ஐந்தெண் நடை

பல்லவி

தாளாண்மை மிகுந்திடும் வேளாண்மைக் குலமதில்
தத்துவராய்ப் பிறந்தார் சத்தியாரே சிறந்தார்
(தா)

அநுபல்லவி

ஆளாய்ச் சிவனுக்கென்றும் ஆண்மைத்திருத்
தொண்டினை
மாளாத் தகைமையிற்செய் மாறுத்திறன்உடையார்
(தா)

சரணம்

கேளாம் அடியார்தம்மைக் கேவலமாயிகழ்ந்து
கீழாய் இகழ் ஈனரின் கேடார் புன்னுவினையே
வாளால் அரிந்துதூய வன்மை மிகுந்த தொண்டர்
வள்ளல் வீரச்சைவர்கள் உள்ளும் தீரத்தலைவர்
(தா)

47. ஐயடிகள் காடவர்கோன் நாயனர்

"ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"சத்தித் தடக்கைக் குமரன்நற் ருதைதன் தானமெல்லாம்
முத்திப் பதமொரோர் வெண்பா மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் ருள்அரற் காயைய மேற்றலென்னும்
பத்திக் கடலை யடிகளா கின்றநம் பல்லவனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஸரஸாங்கி
27வது மேளம்

தாளம்: மிஸ்ரசாபு
எழெண் நடை

பல்லவி

மையணியும் கண்டத்தார் மலரடிக்காளானர்
ஐயடிகள் காடவர் கோன் அருள்மிகுந்தோன்
(மை)

அநுபல்லவி

வையமுழுதும் சைவ வாழ்வுதழையச் செய்து
வல்லதொரு பல்லவ வள்ளலெனவே யாண்டோன்
(மை)

சரணம்

மண்பாவிடும் ஆட்சிதான் மாயமென்றே துறந்து
கண்பாவிடும் நுதலோன் காட்சிகண்டே
ஒவ்வொரு
பண்பாவிடும் தலத்தைப் பாடிப் பணிந்தொவ்வொரு
வெண்பாவினைப் புகன்ற விண்பாவிடும் புகழோன்
(மை)

48. கணம்புல்ல நாயனார்.

"கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும்......அடியேன்"

—சுந்தரர்.

"நன்னகராய இருக்குவே ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லை புகுந்து புலீச்சரத்து
மன்னவராய அரற்குநற் புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோளெந்தை தந்தைபிரான் எங் கணம்புல்லனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மாயாமாளவகௌளை — தாளம்: ஆதி
15வது மேளம் — இரண்டுகளைச்சவுக்ககாலம்
சம எடுப்பு

பல்லவி

தந்திரு முடியாலே தனிவிளக் கெரித்த தோர்
விந்தை மிகும் அடியார் கணம்புல்லரே (த)

அநுபல்லவி

முந்திய நாளிலேதம் மூண்டசெல்வத்தால்
என்றும்
சந்திரனைப் போற்கோயில் தன்னில் விளக்
கெரித்தார் (த)

சரணம்

நல்குரவு வந்துற நம்பன் தில்லைக் கோயிலில்
நாளும் புல்விற்றுவாங்கும் நன்னெய் எரித்தும்,
பின்னர்
புல்தனையும் எரித்தும், போதாமையால் அதுவும்
பொருள் வேறின்றி எரிக்கப் புந்தி துணிந்
தெழுந்தே (த)

49. காரி நாயனுர்

"கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
........காரிக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"புல்லன வாகா வகையுல கத்துப் புணர்ந்தனவுஞ்
சொல்லின வுந்நய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங் கயிலைபுக் கான்என்பரால்
கல்லன மாமதில் சூழ் கடவூரினிற் காரியையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: வலஜி தாளம்: ஆதி

28வது ஹரிகாம்போதியிற் பிறந்தது

பல்லவி

கண்டெனவும் இனிய தண்டமிழ்க் கோவைபல
காதலுடன் செய்தவர் காரியெனும் பேரினர்
(க)

அநுபல்லவி

அண்டும் மூவேந்தரிடம் அரியஉரைகள் கூறிக்
கொண்டபொருள் கொண்டிறை கோயில்களே
சமைத்தார் (க)

சரணம்

இன்ப மொழிபயின்றே என்றும் தமையெய்திய
அன்பர்களுக்கு நிதி ஆசையுடன் உதவி
என்புருக்கும் இறைவன் ஈசன் அடிமறவார்
தம்புனித உடலைத் தாங்கியுற்ருர் கயிலை (க)

50. நெடுமாற நாயனார்.

"நிறைக் கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"கார்த்தண் முகிற்கைக் கடற்கா ழியர்பெரு மாற்கெதிராய்
ஆர்த்த அமணர் அழிந்தது கண்டுமற் றூங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலியில் வென்ற மாறனுக்கே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மோஹனம் தாளம்: சதுரஸ்ர
29வது தீரசங்கராபரணத்திற் அடதாளம்
பிறந்தது 12 எண்கள்

பல்லவி

நெடுமாறனார் பெருமையதே நிலவும் என்றும்
நீள்நிலத்தில் இதையினிநீ நினைமனமே (நெ)

அநுபல்லவி

அடுமாறடைந்த பகையது தடுமாறியும் அழிய
அடல் ஏறெனவே வென்றெழில் அணிவாகை
சூடிநின்ற (நெ)

சரணம்

வெம்மைவினையால் தாமுன் வேறு நெறியில் நிற்ப
அம்மை மங்கைக்கரசி யவரும், அமைச்சர் ஏறும்
செம்மைக்குலச்சிறையும் சீர்காழி வள்ளல் வழி
தம்மைத் திருத்திச்சைவம் தன்னிற் பொருத்த
உயர் (நெ)

51. வாயிலார் நாயனுர்

"துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"மாறு அருளான் றன்னை மன்வா லயத்திருத்தி
ஆறு அறிவாம் ஒளிவிளக் கேற்றி அகமலர்வாம்
வீறு மலரளித் தன்பெனும் மெய்யமிர் தங்கொடுத்தான்
வீரூர் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சுத்ததன்யாசி தாளம்: திஸ்ர ஏகம்
22வது கரஹரப்ரியாவிற் பிறந்தது

பல்லவி

குயிலார்க்கும் பூஞ்சோலை கூடும்பழம்பதியாந்திரு
மயிலாப்பூர் மேவிநின்றார் வாயிலாரே (கு)

அநுபல்லவி

கயிலாயமலையாரும் காபாலீச்சுரர் பாதம்
கணமாகிலும்மறவாக் காதல்செய்தே உயர்வார் (கு)

சரணம்

மறவாமை யாலமைத்த மனமாம் கோயில்இருத்தி
உறவாதி தனையுணர் வொளி சுடர்விளக்கேற்றி
இறவாத ஆனந்த எழில் மஞ்சனமுமாட்டி
அறவாணர் தமக்கன்பாம் அமுதால் அர்ச்சனை
செய்தார் (கு)

52. முனையாடுவார் நாயனார்

"அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கடியேன்"

—சுந்தரர்.

"என்று விளம்புவர் நீடூர் அதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க் காக்கூலி யேற்றெறிந்து
வென்று பெருஞ்செல்வ மெல்லாங் கனகநன் மேருவென்னுங்
குன்று வளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஹம்ஸத்வனி
29-வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது

தாளம்: கண்டஜாதி
திரிபுடை

பல்லவி

தோள்வலிமையால் உயர் முனையடுவார் நீடூர்
தொண்டர்கட்கே நிகழும் வினையடுவார்திகழ் (தோ)

அநுபல்லவி

தாள்வலிமையார் அரன் தன்னைப்பணிந்து நிதம்
தார்வலிமையால்நிறை பேர்வலிமைபெற்றவர்
(தோ)

சரணம்

ஆள்வலிமைகுறைந்தே ஆழ்ந்திடுவோர்கள்போரில்
ஆர்ந்திடில் தம்மைநாடிச் சார்ந்தவர்கள் துணையாய்
வாள்வலியால் அவரின் வன்பகையைவென்று
கொள்
வாழிசெல்வம் அடியார் வாழியென்றே வழங்கும்
(தோ)

53. கழற்சிங்க நாயனுர்.

"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"மாதவத் தோர்தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப் பொற்கை
காதிவைத் தன்றே அரிவதென் றுங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங் கோதைக் கழற்சிங்கனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பூரிகல்யாணி
53வது கமனச்ரமத்திற் பிறந்தது

தாளம்: திஸ்ரஜாதி அடதாளம்
பத்து எண்கள்

பல்லவி

கழற்சிங்கர் என்னும் உயர் காடவர்கோன் பதத்தைக்
களித்திங்கு போற்றுவதெம் கடமைகண்டீர் (க)

அநுபல்லவி

தழற்பொங் கெழிலின்மேனி சங்கரன் தன்னை யல்லால்
தணிந்து பணிந்தறியாத் தனிமுடிவேந்தரான (க)

சரணம்

புற்றிலமர்ந்தவரைப் போற்றியடையும்போது
பூசைப்பூவை மோந்ததம் நாசியைச்செருத்துணை
பற்றியரியப் பெற்றதம் பட்டமகிஷிகையும்
குற்றமியற்றிற்றென்றே கொண்டதையுந்
துணித்த (க)

54. இடங்கழி நாயனுர்.

"மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வம் எனப்பறைபோக்
கெங்கட் கிறைவன் இருக்குவேளூர்மன் இடங்கழியே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: வாசஸ்பதி
64வது மேளராகம்

தாளம்: ஆதி

பல்லவி

கோனாட்டுக் கொடும்பாளூர் இடங்கழியார் சிவன்
பானாட்டும் பரிவான திடங்கழியார் (கோ)

அநுபல்லவி

மானாட்டுஞ் செங்கரத்தன் தேனாட்டுங் கொன்றை
யன் எம்
கோனாட்டுங் கோயில்பல வேநாட்டினர் நாட்டில்
(கோ)

சரணம்

தொண்டர்க் கமுதளிக்கத் தோன்றாது வேறுவழி
தோன்றித்தம் நெல்கவர்ந்த தூயதொண்டருடனே
அண்டமுள்ள தொண்டர்கள் யாவருக்குந்தம்நிதிப்
பண்டமெல்லாம் உதவிக் கொண்டார்நிதிப்பயனே
(கோ)

55. செருத்துணை நாயனார்

"தஞ்சைமன்னவனும் செருத்துணை தன்
அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"கழிநீள் கடல்நஞ் சயின்றூர்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்தன் தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தான்என் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே".

—நம்பியாண்டார்நம்பி.

இர்ாகம்: தோடி
3வது மேளம்

தாளம்: ஆதி
இரண்டுகளைச்சவுக்ககாலம்
முக்கால் இட எடுப்பு

பல்லவி

அஞ்சலின்றி யரற்கே ஆண்மைப் பணிகள்
செய்த
அடலேறனையார் செருத் துணையாவரே (அ)

அநுபல்லவி

தஞ்சை நகரில் உயர் தாளாண்குடியில் வளர்
தலைவராகிச் சைவமே நிலைபெறச் செய்தவரே
(அ)

சரணம்

கூசிடாதாரூரின் கோமானுக்குற்றமலர்
கொண்டு மோந்த அணங்காம் கோன்கழற்சிங்கர்
தேவி
நாசிதனைத் துணிந்தே வீசிவாளால் துணித்தே
நம்பர் கோயில் புரந்தே நானிலத்தே சிறந்தார்
(அ)

56. புகழ்த்துணை நாயனூர்

"புடைசூழ்ந்த புலியதண்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த
புகழ்த்துணைக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி உமைகோனை மஞ்சனஞ்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியா
தருவரை வில்லி அருளும் நிதியது பெற்றனனே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மலயமாருதம்
16வது சக்கரவாகத்திற்
பிறந்தது

தாளம்: கண்டஜாதி
திரிபுடை

பல்லவி

மகிழ்த்துணையாய்த் தொண்டர் அருட்டுணையாம்
சிவன்
புகழ்த்துணையார்க் கொரு பொருட்டுணையாரே (ம)

அநுபல்லவி

நிகழ்த்தி நலமும்தீங்கும் நினைப்பித்தடியவரை
நிறுத்தித் திருநெறியில் கருத்திற் கருதியென்றும்
(ம)

சரணம்

வற்கடம்வந்துணவும் அற்றபொழுதிலும் தம்
நற்கழலுக்கடிமை நாளும் செய்து நலிந்தே
நிற்ககில்லார் விழுந்து நீர்க்குடத் தோடயர்ந்த
பொற்புறும் தொண்டர்வாழப் பொன்னளித்தார்
நிதமே (ம)

57. கோட்புலி நாயனர்

"அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"பெற்றம் உயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்ற மறுக்குந் தொழில்திரு நாட்டியத் தான்குடிக்கோன்
குற்ற மறுக்குநங் கோட்புலி நாவற் குரிசில் அருள்
பெற்ற அருட்கடல் என்றுல கேத்தும் பெருந்தகையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சாளகபைரவி
22வது கரஹரப்ரியாவிற்
பிறந்தது

தாளம்: ஆதி
இரண்டுகளைச் சவுக்ககாலம்
அரையிட எடுப்பு

பல்லவி

நாட்டியத்தான் இறைவன் தாட்சலியார் திரு
நாட்டியத்தான் குடியின் கோட்புலியார் மன்றில்
(நா)

அநுபல்லவி

பாட்டிசைச்சுந்தரரால் பண்புடன் தாம்பயந்த
பாவைப்புதல்வியர்கள் மேவிப்புகழப் பெற்றார்
(நா)

சரணம்

ஒன்னார் உறும்போர் வென்றே ஊர்திரும்பியக்
காலே
ஓங்கு கோயில் நெல்லையும் உண்டு பிழைத்த
சுற்றம்
இன்னாரினியாரின்றி எல்லோரையுந் தம்வாளால்
சின்னாபின்னப்படுத்திச் சேர்ந்தனர் ஈசன்தாளே
(நா)

58. பத்தராய்ப் பணிவார்கள்

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"அரசினை ஆரூர் அமரர் பிரானை யடிபணிந்திட்
டுரைசெய்த வாய்தடு மாறி யுரோம புளகம் வந்து
காசாணுதி அவயவங் கம்பித்துக் கண்ணருவி
சொரிதரும் அங்கத்தினோர் பத்தரென்று தொகுத்தவரே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: கமாஸ்
28வது ஹரிகாம்போதியிற்
பிறந்தது

தாளம்: ஆதி

பல்லவி

ஈசனுக்கன்பர்களை ஆசையினலணைந்து
பூசனைசெய்வர்பத்த ராய்ப் பணிவார் (ஈ)

அநுபல்லவி

நேசமுடன் இறைவன் நீண்டபுகழைக்கேட்பார்
கூசும் உடல் கம்பித்து மாசில்கண்ணீர் வடிப்பார்
(ஈ)

சரணம்

காயமொடு வாய்மனம் கடவுளுக்கேயாக்கிக்
கண்ணுதலார் எழிலைக் கண்களினுற் பருகி
நேயமுறும் மொழிகள் நெகிழவாய் தழுதழுப்பத்
தூயமனம் அவர்தாள் ஓயுதலின்றி உன்ன (ஈ)

59. பரமனையே பாடுவார்

"பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"தொகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே
மிகுத்த இயலிசைவல்ல வகையில் விண்தோயு நெற்றி
வகுத்த மதிற்றில்லை அம்பலத் தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல் லோர்என்பர் உத்தமரே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஈஸமனோஹரி
28வது ஹரிகாம்போதியிற்
பிறந்தது

தாளம்: ஆதி

பல்லவி

பரமனையே பாடும் பத்தர்கள் பாதம் என்றன்
சிரமதற் கணிகலம் தேர்ந்தனன் நானே (ப)

அநுபல்லவி

புரமதனை எரித்துப் பூணுகமேயணியும்
அரன்எனும் நாமத்தின் ஐயன் அருள்மெய்யனும்
(ப)

சரணம்

தேனினும் கரும்பினும் இனியதீந்தமிழினும்
தேவர்களோடும் சீர்வடமொழியிலும்
மானினையேந்திய வானவர்கோனினை
மாலறவேபல காலமுமேநனி (ப)

60. சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார்

"சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"உத்தமத் தானத் தறம்பொருள் இன்பமொ டியெறிந்து
வித்தகத் தானத் தொருவழிக் கொண்டு விளங்கச் சென்னி
மத்தம்வைத் தான்திருப் பாதகமல மலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத் தாரென்பர் வீடுபேறெய்திய செல்வர்களே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: கருடத்வனி
29-வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது.

தாளம்: ஆதி

பல்லவி

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவரே நம்
சித்தத்தைத் தம்பாலே சேர்த்தவராம் (சி)

அநுபல்லவி

வித்தகத்தால் விழையும் வேதத்தினுல் தழையும்
புத்தகத்தால் என்றுமே புரியவொண்ணுவகையில்
(சி)

சரணம்

காரணபங்கயத்தின் கடவுளர் பதம்தாண்டிப்
பூரணபரஞ்சோதி பொலிந்திடும் நாதாந்தத்
தாரணையாற் சிவத்தைத் தாமடையமன்றினுள்
ஆரணக்கூத்தனடி ஆராவன்பினிற்கூடிச் (சி)

61. திருவாரூர்ப் பிறந்தார்கள்

"திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"செல்வந் திகழ்தரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ ரேயத னால்திகழச்
செல்வம் பெருகுதென் னாரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்கணித் தாய செழுநெறியே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஆரபி | தாளம்: ஆதி
29-வது தீரசங்கராபரணத்திற்
பிறந்தது

பல்லவி

தென்தமிழ் நன்னாட்டின் திலகம் என்றே திகழ்
திருவாரூர்ப் பிறந்தார்கட் கென்றும் புகழ் ஆமே
(தெ)

அநுபல்லவி

முன்தமிழுடன்சைவம் மும்மையும் போற்றிட
வன்தொண்டரும் வாழ்ந்து வாயாலும் பாடிய(தெ)

சரணம்

ஓங்குகயிலைதன்னில் பாங்கினமர்கணத்தார்
ஓவாத்திருமலிந்த மூவாத்தமிழ் ஒலிக்கும்
தேங்கும் எழிலின் இவ்வூர் சேர்ந்து பிறந்தனரால்
செப்பவொண்ணுமோயீண்டு தப்பாது தித்தார்
சீரே (தெ)

62. முப்போதுந் திருமேனி தீண்டுவார்

"முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்"

—சுந்தரர்.

"நெறிவார் சடையரைத் தீண்டி முப்போதுநீடாகமத்தின்
அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர் நம்மையும் ஆண்டமரர்க்
கிறையாய் முக்கண்ணும் எண்தோளுந் தரித்திறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெரு மாற்குறை வாய உலகினிலே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சங்கராபரணம் தாளம்: மிஸ்ரசாபு
29-வது மேளம் ஏழெண்நடை

பல்லவி

முப்போதும் அர்ச்சிக்கும் முதற்சைவராம் முனிவர்
எப்போதும் எங்களுக்கே இனியவரே (மு)

அநுபல்லவி

மெய்ப்போத நெறிவந்த மேன்முறைவழுவாமல்
அப்போதைக் கப்போதும் ஆர்வமுடன் சிவனை
(மு)

சரணம்

மாலும் அயனும் மற்றை வானவரும் அறியா
மன்னவன்மேனிதனை மகிழ்ந்துதீண்டித் தேனொடு
பாலும் கரும்பும் நெய்யும் பண்புடன் ஆட்டிக்
கோதில்
பல்வகையாம் மலரால் நல்வகை மாலைசாத்தி (மு)

63. முழுநீறுபூசிய முனிவர்

"முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"உலகு கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்
விலகுதல் இல்லா விதியது பெற்ற நல் வித்தகர்காண்
அலகில் பெருங்குணத் தாரூர் அமர்ந்த அரனடிக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக் கணியும் இறைவர்களே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சாவேரி
15-வது மாயாமாளகௌளையிற்
பிறந்தது.

தாளம்: ஆதி
இரண்டுகளைச் சவுக்ககாலம்
அரையிட எடுப்பு.

பல்லவி

மோகாதி குறைகளை முழுதும் எரிக்கும் நீற்றைத்
தேகமுழுதணிவோர் தேசுடையார் என்பீரே
(மோ)

அநுபல்லவி

ஆகாதெனவிதித்த அகற்பமகற்றிநன்கு
வேகவைத்தேபுனித மாகஎடுத்ததாலே (மோ)

சரணம்

வேதாகமங்களிலே விதித்தமுறைகளிலே
மேலானமந்திரங்கள் மேவிப்புகன்றுநீற்றைப்
பாதாதிகேசமெங்கும் பால்நிறமாய்ப்புனைந்த
பாசமிலா அடியார் ஈசனுக்கே உரியார் (மோ)

64. அப்பாலும் அடிச்சார்ந்தார்

"அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"வருக்க மடைத்துநன் ஞவலூர் மன்னவன் வண்தமிழால்
பெருக்கு மதுரத்தொகையிற் பிறைசூடி பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடப் பாலடிச் சார்ந்தவர் என்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத் தோர்நஞ் செழுந்தவரே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: சாரங்கா | தாளம்: மிஸ்ரசாபு
65வது மேசகல்யாணியிற் பிறந்தது | ஏழெண்நடை

பல்லவி

அப்பாலும் அடிச்சார்ந்தார் அரசரணம்கொள்ள
எய்ப்பாகும் பிறவியே இனித்திரணம் (அ)

அநுபல்லவி

தப்பாமலும் வாழ்வினில் தமிழ்நாட்டின்
எல்லைக்கும்
அப்பாலுள்ள நாட்டில் அப்பனுக்கன்புசெய்தே
(அ)

சரணம்

செப்பார் மூலபங்கனின் சீரடியார்கள் கதை
செப்புந் தொண்டத்தொகையில் செப்புங்
காலத்தினுக்கே
இப்பாலும் அப்பாலும் என்னும் முன்னும்
பின்னுமே
வைப்பாகும் எம்சிவனை மெய்ப்பாடுடன் வணங்கி
(அ)

65. பூசலார் நாயனர்

"மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

"பதுமநற் போதன்ன பாதத் தாற்கொரு கோயிலையான்
கதுமெனச் செய்குவ தென்றுகொ லாம்என்று கண்துயிலா
ததுமனத் தேஎல்லி தோறும் நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றல் உலாநின்ற வூர்தனிற் பூசலையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: ஷண்முகப்ரியா
56வது மேளராகம்

தாளம்: ஆதி
இரண்டுகளைச்சவுக்ககாலம்
அரையிட எடுப்பு

பல்லவி

மாசிலா நெஞ்சந்தன்னில் ஈசன் அரனவர்க்குப்
பூசலார் செய்த எழிற்கோயில் பூங்கோயிலே (மா)

அநுபல்லவி

காசிலா ரேஹும் உள்ளம் ஆசிலா ராதலாலே
களங்கமற நினைவால் உளங்கொளப்பொன்
திரட்டி (மா)

சரணம்

விந்தையுறப் பொன்னுல் தான் வேண்டிச் செய்
கோயிலினும்
சிந்தையடியார் மனம் செய்தகோயில் மேலென
எந்தையருளாற் கண்ட ஏதில்மன்னன் நின்றவூர்
புந்திமகிழ்ந்து சென்று போற்றிநின்ருன்
என்றலால் (மா)



66. மங்கையர்க்கரசியார்

"வரிவளையாள் மானிக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"பூசலயிற் றென்ன னார்க்கன லாகப் பொறுமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தாள் அருகந் தருக்குத்தென் னாட்டகத்தே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: தேவகாந்தாரி தாளம்: ஆதி
29வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது

பல்லவி

மங்கையர்க் கரசி எம் மனத்தரசி நெடு
மாநிலச் சைவர்க்கருள் இனத்தரசி

முடுகு:

மங்களரூபி களங்கமில் ஆவி
விளங்கிடுதேவி உளங்களிகூர்தரு (ம)

அநுபல்லவி

செங்கைச் சிவக்கன்றன்று சென்றெடுக்க
முன்னின்று
அங்கைகுவித்தெழுந்தாள் எங்குலத்தெய்வம்
நன்று (ம)

சரணங்கள்

1

காரமண் என்னுமிருள் கலைந்து வெண்ணீற்
றின்னருள்
கதிரொளி பாண்டிநாட்டிற் காலமெல்லாம்
நிலவப்
பேரருட் காழிச்சேயைப் பிரியமுடன் அழைத்த
பெய்வளைச்செல்வி எங்கள் தெய்வத்திருமடந்தை
(ம)

2

சோழர்குலம் விளக்கும் சோதிச்சுடர்விளக்கே;
சுந்தரபாண்டியன் தான் துதிக்கத்தகுந் துணைவி;
வீழவிடாது சைவம் வீரக்குலச்சிறையார்
வேண்டுந் துணையாய்நிற்கப் பாண்டிநன்னாட்
டைக்காத்தார் (ம)

67. நேச நாயனார்

"நேசனுக்கும் அடியேன்"

—சுந்தரர்.

"நாட்டமிட் டன்றரி வந்திப்ப வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற்ற வனெனன்பர் சைவத் தவரரையிற்
கூட்டுமக் கப்படங் கோவணம் நெய்து கொடுத்துநன்மை
ஈட்டுமக் காம்பீலிச் சாலிய நேசனே இம்மையிலே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: காபி   தாளம்: ஆதி
22வது காஹரப்ரியாவிற் பிறந்தது

பல்லவி

ஈசனடியவர்க்கே   இல்லையென்றுதளித்தே
பூசனைசெய்பெரியோர்   நேசர் என்போர்   (ஈ)

அநுபல்லவி

பாசமறு மனத்தைப்   பாம்பணிவாருக்காக்கி
மாசறு வாக்கையவர்   மகிழ் அஞ்செழுத்துக்
காக்கி   (ஈ)

சரணம்

செம்மையுடன் தாம்செயும்   சிறந்தஉடைகளுடன்
சீர்மிகும் கீளும்மேன்மை   செறிந்தகோவணமுமே
வெம்மையுறும் பசியை   வெல்லும்சுவையமுதும்
வேறெப் பொருளாயினும்   வேண்டும் வகை
யளித்தே   (ஈ)

68. கோச்செங்கட்சோழ நாயனுர்

"தென்னுவனுய் உலகாண்ட செங்கணுர்க்கடியேன்"

—சுந்தரர்.

"மைவைத்த கண்டன் நெறியன்றி மற்ருேர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்திவந்து தரணி நீடாலயங்கள்
செய்வித் தவன்திருக் கோச்செங்க ணுன்எனுஞ் செம்பியனே".

"செம்பொ னணிந்து சிற்றம்பலத்தைச் சிவலோகமெய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதலென்பர் நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச்சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கல் கோச்செங்கணுனெனும் நித்தனையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பூரிகல்யாணி
53வது கமனுச்ரமத்திற்
பிறந்தது

தாளம்: சதுரஸ்ர அடதாளம்
12 எண்கள்

பல்லவி

ஆனைக்காவில் அண்ணலார்க்கே ஆர்வத்தாலே
தொண்டுசெய்த
கோனைக்காதல் கோச்செங்கட் கண்ணுன் என்று
கூறுவர் மாநிலத்தோர்
(ஆ)

அநுபல்லவி

தேனைக்காவல்செய்யும் கொன்றைத் தேவர்க்காகத்
தாமும் முன்பு
சிலம்பியாகி வாயின் நூலால் இலங்குபந்தர்
இழைத்தவன்காண் (ஆ)

சரணம்

சோழர்தங்கள் குடியில்தோன்றி ஆனைக்காவின்
கோயிலோடு
தூயகோயில் பலஎடுத்தும் தொலைவில் செல்வத்
துணையும் வைத்தும்
வாழிதில்லையந்தணர்க்கும் மாளிகைகள் மகிழ்ந்த
மைத்தும்
வானநாதர்தாள்கள்போற்றி வாழ்வில் ஓங்கு
வாழ்வடைந்தார் (ஆ)

69. திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்

"திருநீலகண்டத்துப் பாணனார்க் கடியேன்"

—சுந்தரர்.

"தனையொப் பரும்எருக் கத்தம் புலியூர்த் தகும்புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண்டப்பெரும் பாணனைநீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர்கோன் செந்தமிழொடிசை
புனையப் பரன்அருள் பெற்றவன் என்பர்இப் பூதலத்தே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: கரஹரப்ரியா
22-வது மேளம்
தாளம்: திஸ்ர ஏகம்

பல்லவி

ஏழிசையால் நின்ற யாழிசையால் வென்ற
வாழி நீலகண்டப் பாணர்புகழ் பரவிடுவோம் (ஏ)

அநுபல்லவி

காழிசைவஞானக் கன்றுதலந்தோறும்
காதலுடன்பாடும் வேத இசைபாடி (ஏ)

சரணம்

முன்னொருநாள்கூடல் முன்னவனின் முன்பும்
பின்னொருநாள் ஆரூர்ப் பிஞ்ஞகனின் முன்பும்
அன்னவனே கூட்ட ஆர்ந்திசைபாடிப்பின்
பொன்னெழிற் காழியார் போந்த ஜோதி
போந்தார் (ஏ)

70. சடைய நாயனுர்

"என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்"

—சுந்தரர்.

"தலம்விளங் குந்திரு நாவலூர் தன்னிற் சடையனென்னும்
குலம்விளங் கும்புக ழோனை யுரைப்பர் குவலயத்தின்
நலம்விளங் கும்படி நாம்விளங் கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி ஆரூரனைமுன் பயந்தமையே''.

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: பூபாளம் தாளம்: சதுரக்ஷர
15வது மாயாமாளவகௌளையிற் ரூபகதாளம்
பிறந்தது 16 எண்கள்

பல்லவி

திருநாவலூர்ப்பிறந்து சிவனுர் தொண்டாற்சிறந்த
திருவாளராம் சடையர் பெருவாழ்வினர் என்பீர்
(தி)

அநுபல்லவி

உருவாரும் இசைஞானி ஒங்கு கற்பின்மங்கையின்
உடனுரும் இல்வாழ்வின் கடனனவை செய்தார்
(தி)

சரணம்

தம்பிரானின் தோழனும் தாவில்பெருமை
கொண்டும்
அன்பினுள்சங்கிலியை ஆர்வத்துடனேகொண்டும்
எம்பிரானை இரவில் ஏவிப்பரவையின் பால்
இன்பம் அடைந்தவரை முன்பயந்த முனிவர் (தி)

71. இசைஞானியார்

"என்னவனும் அரனடியே அடைந்திட்ட......இசைஞானி"

—சுந்தரர்.

"பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள்ளைப் பொள்ளல்நீள்
பனைக்கைக்
கயந்தா னுகைத்த நற்காளையை யென்றுங் கபாலங்கைக்கொண்
டயந்தான் புகுமரன் ஆரூர்ப் புனித அரன் திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்றும் உரைப்பது ஞானியையே".

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: மேசகல்யாணி
65வது மேளம்

தாளம்: கண்டஜாதி
திரிபுடை

பல்லவி

ஒழியாப் பெருமையுறும் இசைஞானியார் தம்மை
மொழியாற் புகழுதலும் முடியாதென்பேன்
உலகில் (ஒ)

அநுபல்ல்வி

அழியாப் பெருங்குலத்தின் அடியார் சடையனுரை
வழியாய் மணந்தில்லறம் வளமாய் நடத்தியதோர்
(ஒ)

சரணம்

அடியார்சரிதமதை அமுதாய்த் தமிழினிலே
அழகாய் உரைசெய்துமே அழியாப் புகழ்
கொண்டுமே
முடியார் சேரமான் என்னும் முதலார் துணையு
மாகும்
முனியாம் சுந்தரரை முன் நனியாம் வணங்கத்
தந்தார் (ஒ)

72. சுந்தரமூர்த்தி நாயனார்

"தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்றுங்
கெழுதும் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி யெனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய் எனப்பெற்றவன்முரல்தேன்
ஒழுகும் மலரின்நற் றூர்எம்பி ரான்நம்பி யாரூரனே"

—நம்பியாண்டார்நம்பி.

இராகம்: **பைரவி** தாளம்: **மிஸ்ரசாபு**
எழெண்நடை

பல்லவி

அடைக்கலம் ஆகுமுன்றன் அடித்தலமே அதை
ஆரூரனேசூட் டாய்என் முடித்தலமே (அ)

அநுபல்லவி

விடைக்கலங்காரநாதன் விருத்தனுய்வழக்காட
வீதியிடையவனை விரட்டியவா எனக்கே (அ)

சரணங்கள்

1

சடைக்கலங் காரமாய்வெண் சந்திரனை வைத்
திட்டான்
தனக்கலங் காரத்தோழன் தரணியில் நீ என்
றிட்டான்
நடைக்கலங் காரஞ்செய்தோர் நள்ளிரவிற்
சென்றிட்டான்
நம்பன் உன்பொருட்டென்னில் அன்பநின்
போல்வாருண்டோ? (அ)

2

ஆற்றிலிட்ட பொன்தனை ஆரூர்க்குளத்
தெடுத்தாய்
ஆற்றப்பசி பிச்சையூண் அரன்தரநீமடுத்தாய்
பேற்றின் சங்கிலிதன்னைப் பிணைக்கச்சூளே
கொடுத்தாய்
பெருங்கலிக்காமர்கொண்ட பிணக்கொழிய
அடுத்தாய் (அ)

73. மாணிக்கவாசகர்

இராகம்: மோஹனம்
29-வது சங்கராபரணத்திற்
பிறந்தது

தாளம்: ஆதி

பல்லவி

மாணிக்க வாசகரின் வார்த்தை சொல்வோம் நம்
மறுமை யிம்மையிரண்டும் மாற்றிச்செல்வோம்
வெல்வோம் (மா)

அநுபல்லவி

காணிக்கையாய்த் தன்னையும் கையிலுள்ள
பொன்னையும்
காதலுடன் தம்குரு பாதமலர்வைத்ததோர் (மா)

சரணம்

ஆணிப்பொன் னம்பலத்தில் ஆநந்த நர்த்த
னஞ்செய்
ஆதிமுதற்பரமன் சோதி எழிற்சிவனைப்
பேணிப்பணிந்துருகிப் பெய்யும் மழையெனவே
பிரசத்தமிழ் பொழிந்து பிறவித்துயர் ஒழிந்த (மா)

74. நம்பியாண்டார் நம்பி

இராகம்: பேகட
29-வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது.

தாளம்: ஆதி
இரண்டுகளைச் சவுக்ககாலம்
அரையிட எடுப்பு

பல்லவி

நாரையூரிற் பிறந்த நம்பியாண்டார்நம்பிதம்
பேரையோர் முறையேனும் பேசில் நன்றே
இன்றே (நா)

அநுபல்லவி

சீரையாள் பொல்லாப்பிள்ளை யாரை யாண்டும் பணிந்து
தீங்கரும்பன்ன தொண்டர் திருவந்தாதி பாடினார் (நா)

சரணம்

ஊரையாள் ராஜராஜன் அபயகுலசேகரன்
ஓங்கிய நட்புடன்முன் உயர்மூவர்தமிழ்கண்டு
பாரைவாழ்விக்கமுறை பண்புடனே வகுத்தும்
பாடும் பண்கள்வகுத்த ஈடிலாமாமறையோர் (நா)

75. சேக்கிழார்பெருமான்

இராகம்: ஹம்சத்வனி　　　தாளம்: சதுரசுர அடதாளம்
29-வது தீரசங்கராபரணத்திற் பிறந்தது　　　12 எண்கள்

பல்லவி

வாக்கில்யாரும் நிகரிலாத　வாய்ப்பினர் அருள்
வாக்குளார்எம்　மாக்கருணைச்　சேக்கிழார் என்பீர்
(வா)

அநுபல்லவி

தூக்கியாடும்　பாதன்தந்த　சொல்லையே முதல்
ஆக்கியோர்புராணநூலை யாக்கினர் முனம்　(வா)

சரணம்

தேக்கி இன்பம்திகழும் தொண்டத்தொகை
யொடந்தாதி
சீரிற் பாடும் தொண்டர்தங்கள் சிறந்தமாக்கதை
நாக்கினோடு செவியும் ஊனும் உளமும் இன்புற
நாளும் சைவம் வாழப்பாடி நம்மையாண்டவர்
(வா)

திருத்தொண்டர் கீதம் முற்றிற்று.

கீதத்தமிழ்

ஆசிரியர் :

திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.

பத்திரிக்கைகள் பிடித்துள்ள படங்கள்.

I. The Hindu:

This collection contains a hundred songs in Tamil, conspicuously devotional in tenour and highly Rhetorical in manner. The author is a fervent Saiva devotee and possesses an admirable command over literary Tamil. The balance between the necessities of musical diction and the force of thought is well managed.

The author is deeply imbued with the spirit of the songs of the ancient saints like Manickavachagar and traces of the influence are left in reminiscent phrases incorporated in some of these songs....... *(Y. M. Sastri)*

2. The New Times:

The songs are all a marvel of sweetness and sound — the very soul of music. We welcome this book from the pen of the illustrious author, Thiruvasagam K. M. Balasubramanian as symbolic of renascent Tamilnad in the realm of music.

3. Free India:

........Of the enduring results [of the Tamil Isai movement] the coming up of quite a number of noteworthy composers can be hailed as the major and among the note - worthy composers Mr. Balasubramaniam can be counted as one..... Patrons of Tamil Isai will welcome the publication while musicians who are aspiriants of fame will find much use for it.

4. ஞானசம்பந்தம்:

இக்கீதத்திலுள்ள ஒவ்வொரு சொற்களும் தமிழ் மணத்துடன் சிவமணம் கலந்து இன்புறுத்துகின்றன. சமய குரவர்களின் கீதங்கள், சைவம் வளர்த்த பெண்மணிகளின் கீதங்கள், திருநீறு, ஐந்தெழுத்து ஆகியவைகளைப்பற்றிய கீதங்கள், பாடப்பாட இன்பத்தேன் பெருக்கெடுத்தோடுவதைக் காணலாம்.

5. சித்தாந்தம்:

எளிய வாக்கு, தெளிவான கருத்து, ஆழ்ந்த நினைவு, நீரோட்ட கதி, தூய தமிழ், அருமையான மேற்கோள்கள் இவைகள் இந் நூலுக்கு அழகுகளாக வாய்ந்திருக்கின்றன. ......பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு மிக்க பயன் படத்தக்கது. *(C. M. R.)*

6. சைவமணி:

சங்கீத நயம், சாஹித்ய உயர்வு, பத்திச்சுவை, எளிமை எல்லாம் நிறைந்த இக் கீர்த்தனங்கள் தியாகராஜ சுவாமிகளின் தெலுங்குக் கீர்த்தனங்களுக்குக் கீழானவையல்ல ... ஆசிரியர் இந்நூலின் மூலம் தமிழ் இசைக்கும் சைவத்திற்கும் ஆற்றியுள்ள தொண்டு மிக மிகச் சிறந்ததே.

7. தொண்டன்:

தமிழிசையுலகம் பத்திச்சுவையும் சொல்நயமும் பண் அமைப்பும் நிறைந்த இந்நூலுக்குத்தக்க இடமளிக்கும் என நம்புகிறோம்.

8. கல்கி:

இந்தப் புத்தகத்தில் உள்ள நூறு கீர்த்தனைகளும் உண்மையான ஒரு பக்த மணியின் இதயத்திலிருந்து வெளிவந்தவையாகும். தேவாரதிருவாசகங்களிலே ஊறிப் பண்பட்டுப்போன ஒரு இதயத்தி லிருந்துதான் இத்தகைய கீர்த்தனைகள் வெளிவந்திருக்கமுடியும். ஸ்ரீபாலசுப்பிரமணியம் இந்தப்புத்தகத்தின் மூலம் இசைத்தமிழ் உலகத்துக்கு ஒரு சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்.

9. நாரதர்:

எளிய பதங்களும், அரிய கருத்துக்களும், இனிய கர்நாடக மெட்டுக்களும், உயர்ந்த பக்திரஸமும் இப்பாடல்களின் சிறப்பான அம்ஸங்களாகும்.

10. சிந்தனை:

ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடைய ஆசிரியர் தமது பத்திப் பெருக்கை இசைத்தமிழ் மூலமாக வெளியிடும் சிறந்த முயற்சியே 'கீதத்தமிழ்' என்ற இந்நூல் ஆகும். பலபாடல்களில் ஆசிரியர் எடுத்தாளும் தேவார திருவாசக அடிகள் அவருடைய புலமைக்கும் பக்திக்கும் சாட்சியாக நிற்கின்றன.

11. தமிழ்த்தென்றல்:

தேவார திருவாசகப் பல்லவி கொண்டு அமைந்துள்ள கீதத்தமிழ் இருமொழிப் பெரும்புலவரும் இசைவாணருமாகிய ஆசிரியரது அன்பு ஆற்றலையும் அருந்தமிழ்ப் பயிற்சி நுணுக்கத்தையும் பறை யறைந்து காட்டுகிறது. இசைவடிவாகிய இறைவனை இசை மலர் தூவி வழிபடுவார்க்கு இந்நூல் இன்றியமையாத கருவி. தமிழ் இசைவாணர் தலை நிமிர்ந்தோதத் தக்க சிறந்த பாராயண நூல் எனக் கூறுதலும் மிகையாகாது.

12. குமுதம்:

தமிழ் இசை எங்கும் ஒலிக்கவேண்டும் என்று கோரும் இக் காலத்திற்கு ஏற்றதாக இப்புத்தகம் அமைந்துள்ளது. அழகிய கருத்துக்கள் பொதிந்த இத்தமிழ்க் கீர்த்தனங்களுக்குத் தமிழ் நாட்டில் பெருத்த ஆதரவு கிடைக்கும் என்று நிச்சயமாக எதிர் பார்க்கலாம். (ரா. நா.)

13. காவேரி:

பக்திப் பாடல்கள் இவை. படிக்கவும் பாடவும் அழகியவைகள்; பொருள் எளிதில் விளங்குமாறு இயைக்கப் பெற்றவை.

14. காதல்:

கீதத்தமிழ் எங்கும் சங்கநாதம் செய்யும் என்பதில் சந்தேகமென்ன?

15. செங்குந்தன்:

பள்ளி முதற்கொண்டு, இசையரங்கு, நடனம், நாடகசாலை முதலியவற்றிலே பாடத்தக்க முறையிலே அமைந்துள்ள இப் பாடல்களைத் தமிழ்மக்கள் நன்முறையில் போற்றிக்கையாள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

16. குயில் (சென்னை):

கீதத்தமிழில் சைவசமயசாரம் தோன்றும்படிப் பாக்கள் அமைந்துள்ளன. பாக்களில் எளிமையும் இனிமையும் காண்கிறோம். பண் நிரம்பி உள்ளது. இசைபயிலுவோர்க்கு இப்பாடல்கள் பெரும் பயனளிப்பவை. கீதத்தமிழ் படிக்கவேண்டிய புத்தகங்களுள் ஒன்று.

17. தியாகி:

சமயக் கடலில் பருகி ஆசிரியர்மேகம் கீதமழை பொழிந்திருக்கிறது. கருத்துமட்டுமன்றி சொற்களும் பொன்னே போல் போற்றப்பட்டிருக்கின்றன. அன்பர்கள் பருகுக!

18. வெண்மதி:

இப் பாடல்கள் அருள் நிறைந்தவை என்பதில் ஐயமில்லை. சொற்சுவையும் இசையமைப்பும் சுகமாக அமையப்பெற்ற இப் பாடல்கள் மிகச்சிறந்த தமிழ் இசைப்பாடல்களுடன் வைத்து எண்ணப்படவேண்டியவை என்பதே நமது அபிப்பிராயம்.

19. விநோதன்:

......கீதத்தமிழ் தமிழ்மொழிக்கே தனிச்சிறப்பையளிக்கத் தக்கது. எளிய நடையும் அமைந்து இனிய இசை பொருந்த உள்ளம் உருகப் பாடியுள்ளார். அவருடைய இயற்கையான உள்ளத்தை அள்ளிக் கொட்டியிருக்கிறார்......

20. அருட்பெருஞ்சோதி:

திருவாசக மணம் சொழிக்கும் பாடல்கள், மிக எளிய-இனிய நடை; பக்திச் சுவை நனிசொட்டக்கனியும் உள்ளத்தில் எழுந்த எழுச்சி; அன்புப் பெருக்கெடுக்கும் இசைத்தமிழின்ப விருந்து. இதனை நல்கிய ஆசிரியர் தமது பாடல்கள் தமிழகந் தோறும் பரவிப் பொலியக் காண்பர். இதுவிரைவில் கூடுமென்று நம்புகின்றோம். தெருப்பாட்டுக்கள் மல்கியுள்ள இன்றைய தமிழ்நாட்டில் இத்திருப் பாட்டுக்கள் விரைந்து ஆட்கி புரிவனவாக!

21. பாரதமணி:

தமிழிசை புத்துயிர் பெற்றுவரும் இந்நாளில் 'கீதத்தமிழ்' விசேஷ உவகையுடன் வரவேற்கத் தக்கது. அழகான கருத்துக்கள் பக்தியுள்ளத்தில் ஊறி, இசையோடு இசைந்து, சாகித்யமாக உரு

வெடுக்கும்போது, அன்பும் இசையும் கனிந்த தமிழ் உள்ளங்கள் வரவேற்கத்தான்வேண்டும்......

இசைவல்லோர் இசையரங்குகளில் இப்பாடல்களைப்பாடித் தமிழ்நாடெங்கும் முழங்கச்செய்யவேண்டும். அதுவே ஆசிரியர் காலத்தால்செய்த உதவிக்குத்தக்க கைம்மாறுகும்.

22. பாரத தேவி:

இவை (ஆசிரியரது) அவருடைய வாழ்க்கையில் பலசந்தர்ப்பங் களில் தோன்றியவை. அவரது பக்தி உணர்ச்சி, உண்மை அனு பவம் இவைகளின் பயனுக வந்தவை. எனவே கீர்த்தனைகள் வாசிப் பதற்கே சுவை ஊட்டுவனவாக இருக்கின்றன...... ...இயற்கைப் பொருளாகிய ஞாயிறு, திங்கள், கடல், தாமரை, வானவில், முதலிய வற்றைக் குறித்துக் கீதங்கள் இயற்றியதைப் பாராட்டி வரவேற்க வேண்டும். அவை நயமும் கற்பனையும் நிறைந்து இருக்கின்றன...

(நா.ரா.)

23. சந்திரோதயம்:

பல அருமையான தமிழ்ப்பாடல்கள் அர்த்த புஷ்டியுடன், பக் திப் பெருக்குடன் இடம் பெற்றிருக்கின்றன. இசை பயிலுவோர் களுக்கும் பாடுவோர்களுக்கும் ஏற்றதொகுப்பு இது என்று கூறுகிறேம்.........

24. ஆனந்த விகடன்:

...தமிழ்க் கீர்த்தனைகளில் சிரத்தையுள்ளவர்கள், முக்கியமாக கச்சேரிகள்செய்யும் பாடக பாடகிகள் இந்தப் பிரசுரத்தை ஆவலோடு வரவேற்பார்கள்.

25. தினமணி:

பக்தியினுல் பண்பட்ட உள்ளத்திலிருந்து பொங்கிவரும் 100 கீர்த்தனங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. கச்சேரிகளுக்கும் பொருத்தமானவை.

26. தினசரி:

சங்கீதத்துக்கு அனுபவ உணர்ச்சியே பிரதானமானது. புகழ் பெற்ற கீர்த்தனுச்சாரியர்களான தியாகையர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகள், முதலியோர் ஆழ்ந்து அனுபவித்துப் பாடியவைகளே அவர்களுடைய கிருதிகள்; அந்த அனுபவ உணர்ச்சியே அவர்களுடைய கீர்த்தனைகளுக்கு அமரத்துவம் அளித்திருக்கிறது. அவர்களைப் போலவே, எம்பெருமான் புகழில் ஈடுபட்டு உள்ளம் உருகி ஸ்ரீபாலசுப்பிரமணியமும் பாடியிருக்கிருர். இந்தப் பாட்டுக்களும் நிச்சயம் அமரத்துவம் பெற்றுவிடும்.........

இந்நூலின் ஆசிரியர் பழந்தமிழ் இலக்கியத்திலும் முக்கியமாகத் திருவாசகம்போன்ற நூல்களிலும் பெரிதும் ஈடுபாடுடையவர். அதனுல் அவர்வாக்கில் அந்தக் கருத்துக்களையும், என், சொல்லமைப்புகளையும் அப்படியே காணலாம்......

நெஞ்சை உருக்கத்தக்க இந்தப் பாக்களுக்குத் தமிழகத்தார் நல்லவரவேற்பளிப்பார்கள் என்றே நம்புகிருேம். இப்போதே இவருடைய பாடல் சில கச்சேரிகளில் பாடப்பட்டுவருவது அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

27. திரு. R. S. தேசிகன்

தமிழ் நாட்டில் எழுந்த புதிய உணர்ச்சி இசைத்துறையிலும் பாயுமன்ருே? அந்த உணர்ச்சிகளின் சிகரத்தின்மீது மிதந்தவை

எவை என்று கேட்பீர்களாகில், திருவாசகம் திருவாளர். சே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் சிந்தைஉருகிப்பாடிய தமிழ்க் கீர்த்தனங்கள்தாம் என்றுதான் விடையளிப்போம். நாத்திகப் பேயின் கோரக்கூச்சலின் நடுவேஎழுகின்ற இந்தப்பக்திப் பரவசப் பாடல்கள் நம் செவிகளில்பாய்ந்து நம் உள்ளத்தே தொனிக்காமற் போகா. ஆடிஆடி அகங்கரைந்து பாடின அவர் பாடல்கள் நம் உள்ளத்தைக் கனிவிக்கும்; கண்களில் நீர் சுரக்கும்படி செய்யும்; அமைதியைப் பிறப்பிக்கும் என்பதில் ஐயமில்லை.

> "அழுதகண்ணீர் ததும்பி அகங்குழைந்தே வெதும்பித்
> தொழுதழுதேன் முருகனே மால் மருகனே"

என்ற வரிகள் அவருடைய உள்ளக்கிடக்கையை உலகத்தாருக்கு நன்கு புலப்படுத்துகின்றன............தீஞ்சுவை தமிழ்ச் சொற்கள் கொண்டு கீதங்களை அமைத்திருக்கிறார். முருகன், சிவபிரான், திருமால் இவர்கள் மீது பாடிய பாடல்களில் சொல்லும் பொருளும் மணமும் மலரும் போல இசைந்திருக்கின்றன.

ஒருபக்தன் இயற்கையைப் பார்க்கிறபொழுது பக்திச்சாயம் ஏறின கண்களோடுதான் பார்ப்பான்; ஆண்டாள் மேகத்தைக் கண்ணன் வடிவமாகவே சித்திரித்திருக்கிறாள். பிள்ளையவர்களும் இயற்கைப்பொருள் கீதங்களில் இத்தகைய முறையை அனுசரித்திருக்கிறார். நட்சத்திரங்களைப்பற்றிய பாடலில் சொல் இன்பமும் பொருள் நயமும் குழைந்து நிற்கின்றன. இவர் கீர்த்தனங்கள் இசையரங்குகளில் பாடப்பெற்றுத் தமிழர் உள்ளங்களிலே பக்திக் கனலைமூட்டி அவைகளை வெள்ளுயிராக்குமென்று நம்புகின்றேன்.

(R. S. Desikan).

28. செட்டிநாடு:

பக்திப்பரவசமான இப்பாடல்கள் பெரும்பாலும் அம்பாள் பேரிலும் ஆண்டவன் பேரிலும் ஆனவை. பாடல்களுக்கேற்ற பொருத்தமான கர்நாடக கன ஜன்ய ராக தாளங்களில் இந்தப் பாடல்களை அமைத்ததோடல்லாமல், வாகதீஸ்வரி, உமாபரணம், கௌளம், சிவாநந்தி, ப்ரபாவதி, வலஜி, ரிஷபப்ரியா, ஹம்ஸவினோதினி போன்ற அபூர்வ ராகங்களும் கையாளப்பட்டிருப்பது ஆசிரியரின் பரந்த இசைஞானத்தையும் வெளிப்படுத்துகிறது.

பாடின பழம்பாடல்களையே, திரும்பத் திரும்பக் கேட்டு அலுத்துப்போயிருக்கும் சங்கீத ரஸிகர்களை நமது இளம் பாடகர்களும் பாடகிகளும் இந்தக் கீதத் தமிழ்தப்பாடல்களையும் ரேடியோவிலும் சபாக்களிலும் பாடி உற்சாகமூட்டுமாறு விரும்புகிறோம்.

சங்கீத அபிமானிகள் ஒவ்வொருவரிடமுமிருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.

29. மாதமணி: (கோவை)

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களை அரசியல் உலகம் நன்கு அறியும். கீதத்தமிழ் என்னும் இந்த இனிய நூலைப் படிக்கும் போது அவர் மனத்திலே பொங்கும் தமிழாசையும் பக்தியும் நம்மை வியக்க வைக்கிறது.............

இந்த இனியநூல் இலக்கியச் சுவையோடு சாகித்யவன்மையும் கொண்டது. இந்த அரிய முயற்சியைச் செய்த திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு தமிழிசையுலகம் நன்றிகாட்டக் கடமைப் பட்டதாகும்.......... (விசாகன்)

30. சிவாஜி:

அரசியலிலே அடங்காத் ஆர்வங் கொண்டு பாரதத்தாயின் விலங்கு முறிக்கப் புறப்பட்ட நம் நாட்டின் ஏந்தல்களின் படை முகாமிலே திலகமாக விளங்கிய புரட்சிக்கனல் ஸ்ரீ அரவிந்தகோஷ், இன்று ஆசிரமவாசி பகவான் அரவிந்தராகமாறிவிட்டார். அதைப் போலவே, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல், அவர்களும் திடீரென்று பக்திமானுக மாறி இருக்கிருர். சில ஆண்டுகளுக்குமுன் கோட்டும், சூட்டும், ஹாட்டுமாகச் சென்னைபோன்ற நகரங்களிலே சிம்மகர்ச்சனை புரிந்த நம் "கே. எம். பியா" இப்படிச் சைவப் பெரும்பழமாகமாறிவிட்டார் என்று ஆச்சர்யப்படும்படியான தோற்றத்தில் விபூதியும் ருத்திராக்ஷமுமாக இன்று அவர் விளங்குகிருர்.

நூறு அழகிய பக்திரசப் பாக்கள் அடங்கிய புத்தகம் இது. முருகன் வணக்கம், உலகம் நிலையாமை, இயற்கைப் பொருள், பொது, இப்படியாகப் பல் பகுதிகளை வகுத்துக்கொண்டு தேனமிர்தமாகக் கீர்த்தனுமாரி பொழிந்திருக்கிருர்.........இந்நூல் சங்கீத பூஷணங்களுக்கு அரிய பொக்கிஷமாகும். பக்தியாகக் கடவுளைப் பாடித்துதிக்க எண்ணுபவர்கட்கும் மிகவும் ஏற்றதே.

(கா. மு. ஷெரீப்).

உ

குருபாதம்

தருமபுர ஆதீன வெளியீடுகள்

எண்	பெயர்	வருஷம்
1.	குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு சமூகமாலை முதலியன	1924
	,, இரண்டாம் பதிப்பு	1944
2.	நித்திய கன்மநெறி	1927
3.	திருமுல்லைவாயிற் புராணம்	,,
4.	திரிபதார்த்தரூபாதிதசகாரிய அகவல்	,,
5.	சித்தாந்த நிச்சயம்	1928
6.	சம்பிரதாய தீபம்	1928
7.	வருணாச்சிரம சந்திரிகை	1930
8.	சிகாரத்தின மாலை	,,
9.	திருப்பதிகமும் பஞ்சரத்தினமும்	,,
10.	தசமணிமாலை	,,
11.	ஞானசம்பந்த குருராயவட்டகமும், சந்திரகலாமாலையும்	1930
12.	திருவையாற்றுப் புராணம்	,,
13.	சிவானந்தபோத சாரம்	1931
14.	சோடசகலாப் பிராசாத சட்கம்	,,
15.	சைவசன்யாச பத்ததி (வடமொழி)	1932
16.	சிவபோகசாரம்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1936

எண்	பெயர்	வருஷம்
17.	சிவப்பிரகாசக்கட்டளை	1932
	,, இரண்டாம் பதிப்பு	1939
18.	உ௩-வது மகாசந்நிதானத்தின்மீது பலர் பாடிய தோத்திரப் பாடல்	1933
19.	திருத்துருத்திப் புராணம்	1933
20.	ஞானசரிதை	1934
21.	முத்திநிச்சயம்—சிற்றுரையுடன்	,,
22.	அறிவானந்த சமுத்திரம்	,,
23.	பண்டாரமும்மணிக்கோவை குறிப்புரையுடன்	1937
24.	இந்துமத பாலபாடம்	,,
25.	சிதம்பரச் செய்யுட்கோவை உரையுடன்	,,
26.	திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம்	,,
27.	கிளிவிடுதூது	,,
28.	திருமூலப்பால் சிறப்பு	1939
	,, இரண்டாம் பதிப்பு	1941
29.	பதி பசு பாசத்தொகை	1940
30.	ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிகர்நான்மணிமாலை	,,
31.	திருபுவனத் தலமகிமைச் சுருக்கம்	,,
32.	கீர்த்தித்திருவகவல்	1941
33.	ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாறும் சில பாசுரங்களும்	,,
34.	வைத்தீஸ்வரன்கோயில் தேவாரம் திருப்புகழ்	,,
35.	திருத்தொண்டத் தொகையும் அசபாநடன பதிகமும்	,,
36.	குங்கிலியக்கலய நாயனார் அன்பின்திறம்	,,
37.	திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ்	,,
38.	திருவையாற்றுத் தேவாரம் திருவாசகம் திருப்புகழ்	,,
39.	புள்ளிருக்குவேளூர்ப் புராணம்	,,

எண்	பெயர்	வருஷம்
40.	சித்தாந்த சைவ வினாவிடை	1941
41.	நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும்	,,
42.	ஆச்சாள்புரத் தலவரலாறு	,,
	,, இரண்டாம் பதிப்பு	1943
43.	திருவையாற்றுத் தலவரலாறு	1941
	,, இரண்டாம் பதிப்பு	1943
44.	சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலி வெண்பாவும்	1941
45.	தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு	,,
46.	சிவபூஜாவிதி	,,
47.	சைவாநுட்டானவிதி	,,
48.	திருக்கடவூர் உலா குறிப்புரையுடன்	,,
49.	திருப்பாடல்கள்	1924
50.	விநாயகர் அகவல்கள்	,,
51.	சீகாழித் தலவரலாறு	,,
52.	மெய்கண்டசாத்திரம் மூலம்	,,
53.	கற்குடித் தலவரலாறு	1943
54.	நீதிநெறிவிளக்கம் (உரையுடன்)	,,
	,, இரண்டாம் பதிப்பு	1949
55.	திருவாரூர் நான்மணிமாலை மூலமும் வசனமும்	1943
56.	சகலகலாவல்லிமாலை (உரையுடன்)	,,
57.	கந்தரனுபூதி	,,
58.	குத்தாலத் தலவரலாறு	,,
59.	குறுக்கைத் தலவரலாறு	,,
60.	திருபுவனத் தலவரலாறு	,,
61.	திருக்கடவூர்த் தலவரலாறு	,,
62.	புள்ளிருக்குவேளூர்த் தலவரலாறு	,,
63.	திருப்பனந்தாள் தலவரலாறு	,,

எண்	பெயர்	வருஷம்
64.	உ௪-வது மகாசந்நிதானம் பத்தாண்டு ஆட்சி மலர்	1943
65.	அப்பர் சுவாமிகள் புராணம் C. K. S. விரிவுரையுடன்	1944
66.	மெய்கண்டான் சித்தாந்தமகாநாடு திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள்	,,
67.	சிவஞானபோத சூத்திரக் கட்டுரை	,,

25வது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காலத்தில் வெளியிடப்பட்டவை.

எண்	பெயர்	வருஷம்
68.	ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை	1945
69.	சிவப்பிரகாசம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
70.	தருமபுர ஆதீன நூல் நிலையப்புத்தகப்பட்டி	,,
71.	புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
72.	பஞ்சாவரணத் தோத்திரங்கள்	1945
73.	சிதம்பரத்துத் திருப்பதிகங்கள்	,,
74.	தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா	,,
75.	திருவேட்களத் திருப்பதிகங்கள்	,,
76.	திருநெல்வாயில் திருப்பதிகம்	,,
77.	திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்	,,
78.	திருநாரையூர்த் திருப்பதிகங்கள்	,,
79.	தருமபுர ஆதீன ஆவணிமூலத் திருநாள்	,,
80.	ஆச்சாள்புரத் திருப்பதிகம்	,,
81.	திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்	,,

எண்	பெயர்	வருஷம்
82.	திருத்துருத்தித் திருப்பதிகங்கள்	1945
	,, இரண்டாம் பதிப்பு	1946
83.	திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள்	1945
84.	திருக்கோளிலித் திருப்பதிகங்கள்	,,
85.	திருக்கடவூர்த் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
86.	சிவஞானபோதம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1945
87.	சோமவார விரதம்	,,
88.	திருநீறு	,,
89.	உருத்திராக்கம்	1945
90.	ஐந்தெழுத்து	,,
91.	கந்தர்சஷ்டிவிரதச்சிறப்பு (திருமுருகாற்றுப்படையுடன்)	1946
	,, இரண்டாம் பதிப்பு	1948
92.	திருவருட்பயன் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1946
93.	தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம்	,,
94.	ஆண்டாள் திருப்பாவை	,,
95.	திருக்கலிக்காமூர்த் திருப்பதிகங்கள்	,,
96.	தருமபுரஆதீனப்பாடசாலை நிர்ணயவிதிகள்	,,
97.	திருநெல்வேலித் திருப்பதிகம்	,,
98.	திலகவதியார் (உரைநடை)	,,
99.	சீகாழித் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1948
100.	திருக்கோலக்காத் திருப்பதிகங்கள்	1946
101.	திருக்குருகாவூர்த் திருப்பதிகங்கள்	,,
102.	திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகங்கள்	,,
103.	திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்	,,
104.	திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்	,,
105.	கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம்	,,

எண்	பெயர்	வருஷம்
106.	சித்தாந்தத் திரயம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1946
107.	ஸ்ரீகண்டன் (ஓர் சிறு நாடகம்)	,,
108.	திருமுலைப்பால் சிறப்பு	,,
109.	முத்திநிச்சயப்பேருரை	,,
110.	மிருகேந்திரம் (தமிழ்மொழிபெயர்ப்புடன்)	,,
111.	நடராஜசதகம்	,,
112.	உண்மைவிளக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
113.	திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம்	,,
114.	சுவாமிநாதசுவாமி தோத்திரங்கள்	,,
115.	திருநள்ளாற்றுத் திருப்பதிகங்கள்	,,
116.	திருக்கடைமுடித் திருப்பதிகம்	,,
117.	திருப்பறியலூர்த் திருப்பதிகம்	,,
118.	திருவிளநகர்த் திருப்பதிகங்கள்	,,
119.	திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்	,,
120.	திருஆக்கூர்த் திருப்பதிகங்கள்	,,
121.	திருக்கடவூர்மயானத் திருப்பதிகங்கள்	,,
122.	மாயூரத் திருப்பதிகங்கள்	,,
123.	திருநீடூர்த் திருப்பதிகங்கள்	,,
124.	திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்	1947
125.	திருஅன்னியூர்த் திருப்பதிகங்கள்	,,
126.	திருத்தருமபுரத் திருப்பதிகம்	,,
127.	ஆலயவழிபாடு (வசனம்) தோத்திரங்களுடன்	,,
128.	திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள்	,,
129.	திருஎதிர்கொள்பாடித் திருப்பதிகம்	1947
130.	திருமயிலாப்பூர்த் திருப்பதிகம்	,,
131.	திருஒற்றியூர்த் திருப்பதிகங்கள்	,,
132.	திருஞானசம்பந்த நாயனர் புராணம் முதல் நூறுபாடல்கள் C. K. S. விரிவுரையுடன்	,,

எண்	பெயர்	வருஷம்
133.	திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள்	1946
134.	இருபா இருபஃது (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
135.	திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள்	,,
136.	தருமபுர ஆதீனப் பாடசாலை ஆறுவது ஆண்டு அறிக்கை	,,
137.	திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள்	,,
138.	௨௫-வது மகாசந்நிதானம் முதலாண்டு ஆட்சி அறிக்கை	,,
139.	திருக்குரக்குக்காத் திருப்பதிகம்	,,
140.	அருஅஞ்சைக்களத் திருப்பதிகம்	,,
141.	திருப்பழமண்ணிப்படிக்கரைத் திருப்பதிகம்	,,
142.	திருவாழ்கொளிபுத்தூர்த் திருப்பதிகங்கள்	,,
143.	திருஓமாம்புலியூர்த் திருப்பதிகம்	,,
144.	சிவபோகசாரம் விரிவுரையுடனும் ஆங்கில மொழி பெயர்ப்புடனும்	,,
145.	திருக்கானாட்டுமுள்ளூர்த் திருப்பதிகம்	,,
146.	துள்ளிவருகுதுவேல் (வசனம்)	,,
147.	திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள்	,,
148.	திருஅவிநாசித் திருப்பதிகம்	,,
149.	திருமுருகன்பூண்டித் திருப்பதிகம்	,,
150.	திருவெம்பாவைத் திருப்பதிகம் விளக்கத்துடன்	,,
151.	திருவலஞ்சுழித் திருப்பதிகங்கள்	,,
152.	௨௫-வது மகாசந்நிதானம் இரண்டாவதாண்டு ஆட்சி அறிக்கை	1948
153.	திருப்பந்தணைநல்லூர்த் திருப்பதிகங்கள்	,,
154.	திருக்கஞ்சனூர்த் திருப்பதிகம்	,,
155.	திருக்கோடிகாத் திருப்பதிகங்கள்	,,
156.	திருவாப்பாடித் திருப்பதிகம்	,,
157.	சிவஞானசித்தியார் சுபக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,

எண்	பெயர்	வருஷம்
158.	அபிராமி அந்தாதி விரிவுரையுடன்	,,
159.	திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம்	,,
160.	பண்டாரசாத்திரம் முதல் தொகுதி	,,
161.	நலவழி	,,
162.	சுவாமிநாதன் பிரபாவம்	,,
163.	திருந்துதேவன்குடித் திருப்பதிகம்	,,
164.	இன்பம்	,,
165.	அறுபத்துமூவர்	,,
166.	திருவியலூர்த் திருப்பதிகம்	,,
167.	மெய்கண்ட நூற் பொருட்சிறப்பு	,,
168.	திருக்கொட்டையூர்த் திருப்பதிகம்	,,
169.	திருஇன்னம்பர் திருப்பதிகம்	,,
170.	தண்டாயுதபாணித் தோத்திரங்கள்	,,
171.	உ௩-வது மகாசந்நிதானம் மூன்றாவதாண்டு ஆட்சி அறிக்கை	,,
172.	திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம்	,,
173.	திருப்புறம்பயத் திருப்பதிகம்	,,
174.	திருவியலூர்த் திருப்பதிகம்	,,
175.	சைவத் திருமுறைகள் (வசனம்)	,,
176.	அமைதி	,,
177.	திருவைகாவூர்த் திருப்பதிகம்	,,
178.	திருச்சிவபுரத் திருப்பதிகம்	,,
179.	மதுரைப்பதிகம் தலவரலாற்றுடன்	,,
180.	திருப்பரங்குன்றத் திருப்பதிகம்	,,
181.	திருவடகுரங்காடுதுறைத் திருப்பதிகம்	,,
182.	திருப்பழனத் திருப்பதிகம்	1949
183.	திருக்குறள் கதைகள் எண்பது	,,

184. சிதம்பரம் - பதிகங்களுடன் 1949
185. திருப்பெரும்புலியூர்த் திருப்பதிகம். ,,
186. பத்தாண்டுவிழா நிகழ்ச்சி ,,
187. திருநெய்த்தானத் திருப்பதிகம் ,,
188. திருக்கண்டியூர்த் திருப்பதிகம் ,,
189. திருவாரூர் - பதிகங்களுடன் ,,
190. திருவாலம்பொழில் திருப்பதிகம் ,,
191. தாயுமானவர் மடல் குறிப்புரையுடன் ,,
192. நமது கோயில்கள்



உ
சிவமயம்

தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்.

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.
2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.
3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.
4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.
5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் உரையுடன் வெளியிடுவது.
6. அறிஞரைக் கொண்டு ஆலயம் தோறும் அறவுரைவழங்குவது.

7. பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

8. ஆங்கிலக்கலாசாலையில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

9. ஆதீனக்கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

10. தமிழ்க்கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது.

11. வடமொழிக் கல்லூரி நிறுவி சிரோமணித் தேர்விற்கனுப்புவது.

12. ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

13. நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

14. விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.

15. சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாக சமயஉண்மைகளை அறிவுறுத்துவது.

17. சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

18. தமிழ்ப்பணி சமயப்பணி செய்பவர்க்குதவுவது.

19. தமிழ்நாட்டுத் தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.

20. புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்ன மளிப்பது.

22. பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர் களுக்கு உதவுவது.

23. மாயூரத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டி வருவது.

24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்து வருவது.

25. காந்தி நிதி, ஹரிஜன பண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவி நிதி முதலிய பற்பல பொது ஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது முதலியன.



ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள்

குருமூர்த்த ஆலயம்